பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 7 | இதழ் 12 | மார்ச் 1969 | 11 பக்கங்கள் 8 | விலை சதம் 10

**மா சே - துங் சிந்தனை**

நமது விருப்பத்தைப் பொறுத்த வரையில் நாம் ஒருநாள் கூட போரிட விரும்பவில்லை. ஆனால், சூழ்நிலைகள் எம்மைப் போரிடும்படி நிர்ப்பந்தித்தால் நம்மால் இறுதிவரை போரிட முடியும்.

★

# சீன எல்லையில் சோவியத்தின் ஆத்திரமூட்டும் செயல்

சோவியத் யூனியனுக்கும், சீனாவுக்குமான எல்லைப் பிரதேசத்தில் சோவியத் திரிபுவாத கும்பல் ஏற்படுத்திய எல்லைத் தகராறு இந்த வாரம் உலகம் முழுவதிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கிரெம்ளின் மாளிகையின் புதிய ஜார் மன்னர்களின் எல்லைத் தாக்குதல் இதுவல்ல முதல் தடவையானது. ஆனால், இது முன்னயவற்றைவிட பாரதூரமானதாகும். சென்பாஓ எனும் சீனாவின் தீவு, சீனாவிற்கும், சோவியத்திற்கும் இடையிலுள்ள எல்லைப் பிரதேசத்தில் உஸ்ஸூரி நதிக்கரையோரத்தில் இருக்கின்றது. இது சீனாவின் ஹெய்லுங்கியாங் மாகாணத்தைச் சேர்ந்ததாகும். இத் தீவு என்றும்போல் இன்றும் சீனாவினாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. 1860ல் ரஷ்ய ஜார் மன்னரால் பலவந்தமாக சீனாவின்மேல் திணிக்கப்பட்ட சீன—ரஷ்ய ஒப்பந்தத்தில் கூட சென்பாஓ தீவு சீனாவுக்குச் சொந்தமென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த உண்மைகளிலிருந்து எல்லைத் தகராறைத் தோற்றுவித்தவர்கள் சோவியத் ஆட்சியாளர்கள்தான் என்பது தெளிவாகின்றது. இவ் எல்லைத் தகராறு வேண்டுமென்றே வெகு காலம் காத்திருந்து செய்யப்பட்டதாகும். இந்த மாதங்களில் நதியில் நீர் உறைந்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சோவியத் காவல் படைகள் ஆயுதம் தாங்கிய வாகனங்களுடன் உறைபனியைக் கடந்து சாதாரண காவல் கடமைகளிலிருந்த சீனக் காவல் படையினர் பலரைச் சுட்டுக் கொன்றனர். எச்சரிக்கைகள் பல விடுத்து பொறுமையின் எல்லையை அடைந்த சீனக் காவல்படையினர் தற்பாதுகாப்பிற்காக திரும்பத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து சோவியத் ஊடுருவல்காரர்களை துரத்தியடித்தார்கள்.

இவ்வாறாக, இப் பாரதூரமான சம்பவம் சோவியத் நவீன திரிபுவாத துரோகக் கும்பலினால் — கிரெம்ளின் மாளிகையின் புதிய ஜார் மன்னர்களினால் தோற்றுவிக்கப்பட்டது. இவர்கள் பழையஜார் மன்னர்கள் சீனாவிடமிருந்து அபகரித்த யாவற்றையும் வைத்துக்கொள்ள முனைவதோடல்லாமல் முன்பு அபகரிக்க முடியாமல் போனதையும் பறித்தெடுக்க முயலுகின்றனர். சோவியத் திரிபுவாத கும்பலினால் உருவாக்கப்பட்ட ஆத்திரமூட்டும் எல்லைத் தகராறு, அநியாயமாக சோவியத் செக்கோஸ்லவாக்கியாமீது நடத்திய ஆக்கிரமிப்பும், கிழக்கு ஐரோப்பாமீதும் மங்கொலியாமீதுமான சோவியத் சுரண்டல் ஆகியனயாவும் சோவியத் சோஷல் ஏகாதிபத்தியத்தின் இழிவான குணம்சங்களையே வெளிப்படுத்துகின்றன.

செக்கோஸ்லவாக்கியாவைப் போல், சீனா நவீன திரிபுவாதிகளின் கீழ் ஆட்சியிலுள்ளதல்ல, சீன மக்கள், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் எமது சகாப்தத்தின் தலைசிறந்த மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டான தோழர் மாசே-துங்கை முதல்வராகக்கொண்டு மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சார புரட்சி வெளிப்படுத்திய வீரம் செறிந்த வர்க்க

## சீனம், செக்கோஸ்லவாக்கியா அல்ல

போராட்டத்தில் ஊறித்திளைத்தவர்கள். அவர்கள் எவ்வித பயமுறுத்தலுக்கும் அடிபணியப் போவதில்லை. ஆத்திரம்கொண்ட கோடிக் கணக்கணக்கான சீன மக்கள் பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்களைச் செய்துள்ளனர். சோவியத் யூனியனின் இந்த ஆத்திர மூட்டும் செயல்களுக்கு எதிராக உலகெங்கும் இருக்கும் புரட்சி வாதிகள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

சோவியத் சோஷல் ஏகாதிபத்தியவாதிகள் இந்த விதமான பைத்தியக்காரத்தனமான முறையில் மீண்டும் சீன எல்லைக்குள் பிரவேசிப்பார்களேயானால், மக்களின் கோபாவேசக் கனலில் வெந்து சாம்பலாகிவிடுவர். அவர்களுக்கு உதவிசெய்ய எவரும் வரமாட்டார்கள். அவர்களது நண்பன் ரிச்சர்ட் நிக்ஸன்கூடதிரும்பிப் பார்க்க மாட்டார்.

சோவியத் சோஷல் ஏகாதிபத்தியவாதிகள் உள்நாட்டிலும், வெளிவிவகாரங்களிலும் தமக்கு ஏற்பட்ட தோல்விகளிலிருந்து மக்களின் எண்ணங்களை திசைதிருப்புவதற்காகவே இந்த ஆத்திர மூட்டும் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். மேற்கு பெர்லினில், மேற்கு ஜெர்மன் பாராளுமன்றம் சட்டவிரோதமாகக் கூடியதை தடைசெய்யத் திராணியற்ற நிலையிலிருந்துகொண்டு சோவியத் திரிபுவாதிகள் இந்தவித தகராறைத் தூண்டிவிட்டது தற்செயலான தொன்றல்ல.

சோவியத் திரிபுவாத துரோகக் கும்பலின் இந்த நடவடிக்கைகள் அவர்களது ஆட்சி சரியத் தொடங்கி விட்டது என்பதையும், தோழர் மா சே-துங் சிந்தனை சர்வவியாபகமாக உலகம் முழுவதிலும் வெற்றி பெறுவதைக் கண்டு அஞ்சுகின்றனர் என்பதையே காட்டுகின்றன. முதலாளித்துவ விமர்சகர்கள் தற்சமயம் சோவியத் யூனியன் சீனாவைவிட ராணுவபலம் வாய்ந்துள்ளது எனத் திருப்தி அடைவதாகத் தெரிகிறது. இது உண்மைக்குப் புறம்பானதாகும்.

ஆனால், எமது மகத்தான தலைவர் தோழர் மா சே-துங் போதித்துள்ளது போல் யுத்தத்தின் போது ஆயுதங்களுக்கு முக்கிய பங்குண்டென்ற போதிலும் தீர்க்கமான சக்தி அந்த ஆயுதத்தைக் கையாளும் மனிதன் தான். அந்தப் புதிய மனிதன், மா சே-துங் சிந்தனையால் ஆயுதபாணியாக்கப்பட்டிருப்பவன் வெல்லற்கரியவனாகிறான்.

அண்மையில் சோவியத் யூனியன் சீன எல்லையில் ஏற்படுத்திய ஆத்திர மூட்டுதலைக் கண்டிப்பதில் உலகனைத்திலுமுள்ள புரட்சியாளர்களுடன் நாமும் சேர்ந்து நிற்கிறோம். மா சே-துங் சிந்தனையின் கீழ் ஒருமைப்பட்டு, மா சே-துங் சிந்தனையால் ஆயுதபாணியாக்கப்பட்டு இருப்பதால் வெல்லற்கரிய எழுபது கோடி சீன மக்களுடன் எமது ஐக்கியத்தையும் ஆதரவையும் உலகின் புரட்சியாளர்கள் யாவருடனும் சேர்ந்து நாம் பிரகடனப் படுத்துகின்றோம்.

# தொழில் கோர்ட் தீர்ப்பு ஒரு அவமானம்

## நாளொன்றுக்கு எட்டு சதமா சம்பள உயர்வு?

ஒரு வருடத்திற்கு முன் தனியார்துறை தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து தொழிலாளர்களின் சம்பள உயர்வு பற்றிய தொழில் கோர்ட்டின் தீர்ப்பு தொழிலாளர்களை அவமானப் படுத்துவதாகும் என்று இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் குறிப்பிட்டார்.

மேலும், தொழிலாளர்கள் உண்ண உணவு கேட்டனர். அவர்களுக்குக் கிடைத்தது வெறும் பாறங்கல்லுதான். தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1-35 சதம் சம்பளவுயர்வு வேண்டுமென சி. டி. யூ. எப். கோரியது. கூட்டணி தொழிற்சங்கங்கள் இதைவிடக் கூடுதலான சம்பளவுயர்வுக்காக வாதாடின. நாணய மதிப்பிரக்க அலவன்ஸில் மேலும் மாதம் இரண்டு ரூபாய்கள் கூட்டிக் கொடுக்கும்படி தொழில் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது. இது ஒரு நாளைக்கு எட்டு சதம்கூட இல்லை. ஒரு சிகரெட்டின் விலைக்குக்கூட வரவில்லை.

தொழில் கோர்டுகளும், ஏனைய சம்பள நிர்ணய சபைகளும் முதலாளி வர்க்கத்தினால் தமக்குச் சாதகமாகக் கையாளப்படுவதால் அவற்றின்மேல் நம்பிக்கை வைக்கக் கூடா தென சி. டி. யூ. எப். சகல சந்தர்ப்பங்களிலும் தொழிலாளர்களுக்கு எடுத்துக் கூறிவந்துள்ளது. இதே காரணத்திற்காகத்தான் 26 நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது தொழில் அமைச்சர் கட்டாய தீர்வுக்காக தொழில் கோர்டுக்கு பிரச்சனையை விடுத்தபோது, அமைச்சரின் நடவடிக்கையின் காரணமாக வேலைநிறுத்தம் சட்டவிரோதமாக்கப்பட்டபோதிலும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த

8-ம் பக்கம் பார்க்க

## நம்மைச் சுற்றி — நவம்

# யூ. என். பி. யின் தேசிய இளைஞர் படை

“தேர்தல் வரும் பின்னே, அதிர் வேட்டுகள் கேட்கும் முன்னே” என்ற புதுமொழிக்கொப்ப இரு வாரங்களுக்கு முன் யு. என். பி. மாநாடு நடைபெற்றது. சென்ற வாரத்தில் திடீரென தூக்கத்திலிருந்து விழித்த கெனமன் திரிபுவாத கும்பல் கொழும்பு நகரில் உள்ள சுவர்களிலெல்லாம் போஸ்டர் திருவிளையாடல் செய்தார்கள். சமசமாஜக் கட்சியோ தனது வாலிப அணியை கொழும்பில் திரட்டி ஆசனப் போராட்டத்திற்காக மேடை முழக்க தயாரிப்பு செய்தார்கள். இந்த அமர்க்களங்கள், அதிர் வேட்டுகள் எல்லாம் தேர்தல் நெருங்குகின்றதென முன்னெச்சரிக்கை செய்தன.

கடந்தவார இறுதியில் யு. என். பி. ஆட்சி முதலாளித்துவப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக விளம்பரம் செய்து 1969ம் ஆண்டு முடிவுக்குள் 100,000 வாலிபர்களுக்கு வேலை கொடுப்போம் என தம்பட்டம் அடித்திருந்தது. ஒவ்வொரு தொகுதியிலும் 250 வாலிபர் வீதம் 150 பாராளுமன்றத் தொகுதிகளிலும் 37,000 பேர்களுக்கும், படிப்படியாக 90,000 பேர்களுக்கு வேலை கொடுப்பதோடு நல்லொழுக்கத்தையும் போதிக்கப் போவதாக அறிவித்திருந்தது.

இத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக தேசிய இளைஞர்படை ஒன்றை உடனடியாக அமைக்கப்போகிறார்களாம். உலக உணவு திட்டத்திலிருந்து மூன்று கோடி ரூபாய்களை நிதி உதவியாகப் பெற விரைவில் ஒப்பந்தம் ஒன்று செய்யப்படவிருப்பதாகவும், தற்போது அத் திட்டத்திலிருந்து சுமார் 60 லட்சம் ரூபாய்கள் உதவியாகக் கிடைத்துள்ளதாம். இதனை தேசிய இளைஞர்படை திரட்ட செலவிடப்படும் எனவும் பிரசாரம் செய்திருந்தது.

இந்த தேசிய இளைஞர்படை மாகாண அதிபர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி, அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வேலை வாங்கும் மேற்பார்வையைச் செய்வார்கள். இந்த தேசிய இளைஞர் படைக்கு தினம் 3 ரூபாய்கள் சம்பளம். அதில் 2 ரூபாய்களை அன்றன்றே சாப்பாட்டு செலவுக்கு கொடுத்துவிட்டு, மிகுதி ஒரு ரூபாவை சேமிப்பார்களாம். இந்தப் படைக்கு அந்த அந்த தொகுதிகளிலேயே விவசாயப் பயிற்சி, ஆறு, குளம், பாதை வேலைகளில் பயிற்றுவித்து வேலை வாங்கப்படுமாம். இவ்விதம் கூறி மாணவர்களும்—வாலிபர்களும், பொதுமக்களும் ஏமாற வேண்டுமென எதிர்பார்க்கிறது யு. என். பி. பிற்போக்கு ஆட்சி.

நாட்டில் வேலையற்றோர் பட்டியல் 20 லட்சத்தை நெருங்கிவிட்டது. நகர்புறத்து, கிராமத்து வாலிபர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் தாக்குண்டு அன்றாட உணவுக்கு வழியின்றி, விரக்தியடைந்து திணறுகிறார்கள். வருடந்தோறும் சர்வகலாசாலைகளிலிருந்து வெளிவரும் பட்டதாரிகளும், சிரேஷ்ட தராதர சித்தியடைந்த மாணவர்களும் வேலைதேடி அலைந்து முடிவில் தற்கொலையில் தஞ்சமடையும் சம்பவங்கள் கூடிக் கொண்டே வருகின்றன. இந்த வேலையற்றோர் பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியாத யூ. என். பி. ஆட்சி முன்பு வேலை கொடுக்கப் போகிறோம் என விவசாயப் படைக்கு வாலிபர்களைத் திரட்டியதை மக்கள் மறந்துவிடவில்லை. இந்த படையிலுள்ள வாலிபர்களுக்கு மிகக் குறைந்த கூலி கொடுத்து வேலைவாங்கியதோடு, பொது மக்களைத் தாக்கும் குண்டர் படையாக உருவாக்கினார்கள். இதன் மறுபிறப்பே தேசிய இளைஞர் படையும்.

குளியாப்பிட்டி யூ.என்.பி. மாநாட்டில் பிரதமர் டட்லி தேர்தல் எந்நேரமும் வரலாம் என எச்சரிக்கை மணியை அடித்துவிட்டு, மறுகணம் தேசிய இளைஞர் படையைப் பற்றி விளம்பர முழக்கம் செய்வது எதற்காக? என்பதை இந்நாட்டு தொழிலாளர் வர்க்கமும், ஏழை விவசாயிகளும், வாலிபர்களும்—மாணவர்களும், முற்போக்கு எண்ணங்கொண்ட புத்திஜீவிகளும் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது.

போலி முதலாளித்துவ ஜனநாயக மாய்மால நாடகத்தைக் காட்டுவதற்காக நடந்த யூ. என். பி. மாநாட்டில் பிரதமர் டட்லி தனது கட்சியிலுள்ள ஆதரவாளர்களில் சிலர் தன்னை சர்வாதிகார அதிகாரங்களைப் பாவிக்குமாறு கேட்டுக் கொண்டபோது தான் மறுத்துவிட்டேன் எனக்கூறியவர், மறுவாரமே தேசிய இளைஞர் (குண்டர்) படைபற்றி விளம்பரம் செய்திருப்பது ‘பசுத் தோல் போர்த்த புலியின்’ கதையாக இருக்கிறது. தன்னை ஒரு போதிசத்துவர் என வேஷமிட்டுக் கொண்டே யூ. என். பி. யின் சர்வாதிகார ஆட்சிக்கு நாட்டை உட்படுத்துவதே நோக்கமாக இருக்க வேண்டும்.

நாட்டில் பூதாகார வடிவெடுத்துள்ள வேலையில்லாத் திண்டாட்டமும், தினம் உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவினங்களும், குடும்பங்களில் வருமானமின்மையும், போதிய சம்பளவுயர்மின்மையும் பெரும் பொருளாதார நெருக்கடியில் மக்களை ஆழ்த்திக் கொண்டிருக்கிறது. இது தொழிலாளர்களையும், விவசாயிகளையும், வாலிபர்களையும், புத்திஜீவிகளையும் புரட்சிகரப் பாதையில் பொங்கி எழச் செய்கின்றது. குமுறிக் கொண்டிருக்கும் எரிமலை எந்த நிமிடமும் வெடித்து தீயைக் கக்கலாம். இந்தத் தீயில் முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பே தகர்ந்து தரை மட்டமாகலாம் என யூ. என். பி. ஆட்சியும் அதன் எஜமானர்களான ஏகாதிபத்தியமும் பீதியுற்றுள்ளன. அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டால் மக்களை அடக்கி—ஒடுக்கி முதலாளித்துவ சர்வாதிகார ஆட்சியை ஸ்தாபிப்பதே தேசிய இளைஞர் படை திரட்டும் நோக்கம்.

ஏற்கனவே, பொலிஸ் மக்களை அடக்குவதற்கு மிருகத்தனமான நடைமுறைப் பயிற்சிகளை நடத்தியதையும், ராணுவம் பேராதனை சர்வகலாசாலை மாணவர்கள் மீதும், மக்கள் மீதும் புரிந்த அட்டூழியங்கள், விவசாயப் (குண்டர்)படை விவசாயிக்கு இழைக்கும் கொடுமைகளையும் அவதானிக்கும்போது தேசிய இளைஞர் படை திரட்டல், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அல்ல மக்களை அடக்கவே யூ. என். பி. பிற்போக்கு ஆட்சியும், ஏகாதிபத்தியங்களும் செய்யும் சூழ்ச்சி என்பது அம்பலமாகிறது.

வேலையில்லாப் பிரச்சனையை பயன் படுத்தி வாலிபர்களை மிகக் குறைந்த கூலியில் மக்கள் மீது ஏவி வெடித்துக் கிளம்பும் மக்கள் எழுச்சியை அடக்க சகல பிற்போக்காளர்களும் செய்யும் குள்ளநரித் தந்திரமே இந்த தேசிய இளைஞர் படை.

# சீன எல்லையில் சோவியத் ஊடுருவல்

## சீன வெளிநாட்டு அமைச்சின் கண்டனம்

சீனாவின் ஹெய்லுங்கியாங் மாகாணத்தில் உள்ள சென்பாஓ தீவின் பிரதேசத்திற்குள் சோவியத் எல்லைக் காவற்படையினர் 1969, மார்ச் 2ம் திகதி ஊடுருவல் செய்தனர். அவர்கள் சீன எல்லைக் காவற்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அநேகரைக் காயப்படுத்தி கொன்று குவித்தனர். இதனால் ஒரு எல்லையற்ற பாரதூரமான ரத்தம் சிந்தும் சம்பவத்தை உருவாக்கியுள்ளனர். எப்படியாயினும், சீன பிரதேசமான சென்பாஓ தீவு சோவியத் யூனியனுக்குச் சேர்ந்தது என கூறிக்கொண்டு, சீன எல்லைக் காவற்படையினர் சோவியத் பிரதேசத்திற்குள் ஊடுருவல் செய்தனர் என்று சோவியத் அரசாங்கம் அவதூறாகக் குற்றஞ்சாட்டி, அதன் பொய்யான “ஆட்சேபக் குறிப்பை” சீன அரசாங்கத்திற்கு தாக்கல் செய்தது. 1860ல் ரஷ்ய ஜார் ஏகாதிபத்தியத்தினால் சீன மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒரு சமத்துவமற்ற உடன்படிக்கையான, பீகிங், சீன-ரஷ்ய உடன்படிக்கையின் படிகூட, சென்பாஓ தீவு சீன பிரதேசம் என்பதை மறுக்க முடியாமலிருக்கின்றதுடன் அன்றிலிருந்து அது எந்நேரமும் சீன ஆட்சி அதிகாரத்தின் கீழ் நீண்டகாலமாக சீன எல்லைக் காவற்படையினரால் காவல் காத்து வரப்படுகின்றது என்று சீன வெளிநாட்டு விவகார அமைச்சின் ஒரு பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார். சோவியத் யூனியனிடமிருந்து வந்த பொய்யான “ஆட்சேபக் குறிப்பு” கள்ளன் மற்றவனைப் பார்த்து கள்ளன் என்று கூறுவதுபோல் சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலினால் ஆவலோடு புரியப்பட்ட குள்ளத்தனமான செயலாக இருக்கின்றது; ரஷ்ய ஜார் ஏகாதிபத்தியத்தின் அங்கியை எடுத்துக்கொண்டு, சமூக ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக் கொள்கையைத் திணிக்கும் இந்த கும்பலின் கொள்ளைக்காரத்தனமாக அது இருக்கின்றது. சீன ஆட்சி எல்லைப் பிரதேசத்திற்குள் சோவியத் எல்லைக் காவற்படைகள் ஊடுருவல் செய்து, ராணுவ ஆத்திரமூட்டல்களைச் செய்து எவ்விதம் பாரதூரமான ரத்தக்களரிச் சம்பவத்தை உண்டாக்கின என்பதின் உண்மையைத் தெரிவிக்கும் ஒரு ஆட்சேபக் குறிப்பை, சீன அரசாங்கம் 1969 மார்ச் 2ல் சோவியத் அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தது. குறிப்பின் பூரணவாசகம் பின்வருமாறு:

சீனாவின் ஹெய்லுங்கியாங் மாகாண சென்பாஓ தீவுப் பிரதேசத்திற்குள் 1969 மார்ச் 2-ம் தேதி காலையில் சோவியத் எல்லைக்காவல் படையினர் ஊடுருவல் செய்து, சீன எல்லைக் காவல் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அநேக சீன எல்லைக் காவற்படையினரைக் காயப்படுத்திக் கொன்று குவித்தது. இதனால் ஒரு எல்லையற்ற பாரதூரமான ஆயுதம் தாங்கிய எல்லை மோதலை உருவாக்கியுள்ளனர். இதற்கு எதிராக ஒரு வன்மையான ஆட்சேபத்தை சோவியத் அரசாங்கத்திடம் தாக்கல் செய்யும் படி மக்கள் சீன குடியரசின் வெளிநாட்டு விவகார அமைச்சிற்கு பணிக்கப் பட்டுள்ளது.

### திரிபுவாதிகளின் படைகள் அத்துமீறல்

மார்ச் 2-ம் தேதி காலை 9-17க்கு சோவியத் எல்லைக் காவற் படை அதிகாரிகளினால் அனுப்பப்பட்ட நான்கு கவச மோட்டார் வாகனங்களுடன் பூரணமாக ஆயுதம் தாங்கிய பெரும்தொகையான போர் வீரர்கள், மறுதலித்துக் கூற முடியாத சீன பிரதேசமான சென்பாஓ தீவுப் பிரதேசத்திற்குள் பகிரங்கமாக ஊடுருவல் செய்து, வழமைபோல காவல் புரியும் கடமையிலிருந்த சீன எல்லைக் காவற்படையினருக்கெதிராக வெறித்தனமான ஆத்திரமூட்டல்களைச் செய்து, அவர்கள்மீது முதல் முதலாக பீரங்கி, துப்பாக்கி பிரயோகம் செய்து, அநேக சீன எல்லைக் காவற்படையினரைக் காயப்படுத்தியும் கொன்றும் குவித்தனர். சோவியத் எல்லைக் காவற்படையினருக்கு மீண்டும் மீண்டும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டும், அவர்கள் அதைப் பொருட்படுத்தாமை கண்ட சீன எல்லை காவற்படையினர் தமது பொறுமையின் எல்லைக்கு சென்றுவிட்டபொழுது, சுயபாதுகாப்பிற்காக பதில் தாக்குதல் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இந்த பாரதூரமான ரத்தக்களரிச் சம்பவம் சோவியத் அதிகாரிகளினால் முற்றுமுழுதாக, பூரணமாக உருவாக்கப்பட்டது. சீனாவின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்திற்குள் நீண்டகாலமாக வேண்டுமென்றே ஊடுருவல் செய்து; ராணுவ ஆத்திரமூட்டல்களைச் செய்து, இடைவிடாது ரத்தக்களரி சம்பவங்களை உண்டாக்கும் சோவியத் அதிகாரிகளினால் புரியப்பட்ட மற்றுமொரு பாரதூரமான புதிய குற்றமாக அது இருக்கின்றது.

இந்த சம்பவத்திற்கு காரணமாயிருந்த குற்றவாளிகளை சோவியத் அரசாங்கம் தண்டிக்க வேண்டும் என்றும், சீனாவின் ஆதிக்கத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குள் அதன் ஊடுருவலையும், ராணுவ ஆத்திரமூட்டல்களையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், சீன தரப்பிற்கு உண்டான சகல நஷ்டங்களுக்கும் சோவியத் தரப்பு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று கோரும் உரிமையை உடையது என்றும் சீன அரசாங்கம் உறுதியாகக் கோருகின்றது. சீன அரசாங்கம் மீண்டுமொரு முறை சோவியத் அரசாங்கத்தை கடுமையாக எச்சரிக்கின்றது: சீனாவின் புனிதமான ஆட்சி எல்லைக்குற்பட்ட பிரதேசத்திற்குள் மீறிவருவதை அனுமதியோம்; உங்களுடைய வெறித்தனமான பாதையில் வக்கிரபுத்தியுடன் வேண்டுமென்றே பிடிவாதத்துடன் சென்று, சீன-சோவியத் எல்லையில் ராணுவ மோதல்களை உண்டாக்குவதைத் தொடர்ந்தீர்களானால், சீன மக்களிடமிருந்து நிச்சயமாக நீங்கள் பதிலடிகளைப் பெறுவீர்கள்; அதிலிருந்து எழும் சகல பாரதூரமான முடிவுகளுக்கும் சோவியத் அரசாங்கம் பூரண பொறுப்பையும் ஏற்க வேண்டியதாக இருக்கின்றது.

# யூ. என். பி. கோட்டைக்குள் பிளவு?

**யூ. என். பி. க்குள் இரு பிரதான சக்திகளுக்கிடையில் பிளவுண்டு என்பதை பல மாதங்களுக்கு முன் முதல் தடவையாக நாம் அம்பலப்படுத்தியிருந்தோம். இக் கோஷ்டிகளில் ஒரு பகுதியினர் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் தலைமையிலும், மறுபகுதியினர் யூ. என். பி. யின் "பலவான்" ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையிலும் உள்ளனர். இந்தப் பிளவு எவ்வளவு தூரம் போயிருக்கிறதென்றால், கட்சிக்குள் நிர்வாக பதவிகளில் ஜே. ஆரின் ஆட்கள் ஒதுக்கப்பட்டதோடு, டட்லியின் ஆட்கள் மந்திரிகளாக்கப்பட்டனர். சி. டபிள்யூ. ஈ. தலைவர் பதவியிலிருந்து ஜே. ஆரினால் விலக்கப்பட்ட சமரதுங்க செனட்சபை உறுப்பினராக்கப்பட்டு இறுதியில் மந்திரியாக்கப்பட்டார். இது ஜே. ஆரின் கன்னத்தில் அறைந்த அறையெனக் கருதப்படுகிறது.**

டட்லியின் சகோதரரின் மகளும், ஏரிக்கரையின் புதிய தலைவரான ரஞ்சித் விஜயவர்தனவும் திருமணம் செய்து கொண்டதன் மூலம் டட்லியின் கைகள் மேலும் பலமடைந்துள்ளது. அவ்வேளையில் ஜே. ஆர். இலங்கை அரசியலைக் கைவிட்டு வெளிநாட்டில் ஐக்கிய நாடுகள் சபை பதவியொன்றை ஏற்பார் என்ற ஹேஸ்யம் கூறப்பட்டது.

ஆனால், திரைமறைவில் பிளவுகளுக்கு ஒட்டுப்போடப்பட்டதெனத் தெரிகிறது. நுவரெலியாவிலுள்ள பிரதமரின் இருப்பிடத்திலும், தென் இலங்கையிலுள்ள ஜே. ஆரின் கிளப் ஹவுஸிலும் சமரச முயற்சிகள் நடத்தப்பட்டன. இதனால், அண்மையில் இந்தியாவுக்குச் சென்ற பொழுதும், லண்டனில் கொமன்வெல்த் மாநாட்டுக்குச் சென்ற பொழுதிலும் அரசாங்கத்தின் பொறுப்பை ஜே. ஆர். கையில் விட்டுச் செல்ல பிரதமர் துணிந்தார்.

ஆனால், மறுபடியும் பேதங்கள் தோன்றி விட்டனபோல் தெரிகின்றது. ஜே. ஆர். எதிர்கட்சிகளுடன் சேர்ந்து விடுவார் என்று கூட சந்தேகிக்கப்பட்டது. சம்பிரதாயப்படி ஜே. ஆர். உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோதிலும், அண்மையில் குளியாப்பிட்டியில் நடந்த யூ. என். பி. மாநாட்டில் ஜே. ஆரும் அவரது ஆட்களும் ஒதுக்கப்பட்டனர் என்திபல் சந்தேகமில்லை. டட்லியின் செல்லப்பிள்ளை பிரேமதாஸ மூன்று மணி நேரம் உரையாற்ற அனுமதிக்கப்பட்ட அதே வேளையில் ஜே. ஆருக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை.

## நமது அரசியல் நிருபர்

அது மட்டுமல்லாமல், முன்பு ஒரு தடவை கூறியதைப்போல் தனது கட்சியிலுள்ள சிலர் சர்வாதிகாரத்தை செயல்படுத்தக் கோருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார். விஷயம் தெரிந்தவர்கள் இது ஜே. ஆரை குறிப்பிடுவதாகக் கூறுகின்றனர். டட்லி தனது பழைய போட்டியாளனை சேர். ஜோன் கொத்தலாவலை மீதும் வாயசைத்துள்ளார். அவதூறு செய்யும் குற்றச்சாட்டை மறைமுகமாக சேர். ஜோன் மீதுதான் வைக்கப்பட்டது.

இந்தக் குழப்பத்திற்கான உண்மையான காரணம் என்ன என்பதை எம்மால் கூற முடிகிறது. "பிரதமர் பதவிப் போட்டி" (Premier Stakes) என்ற தலைப்பில் முன்பு ஒரு தடவை வெளிவந்ததைப் போன்ற தட்டெழுத்துப் பிரதிகள் சில குறிப்பிட்ட சிலர் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளதென அரசியல் வட்டாரங்களில் ஓர் செய்தி நிலவுகின்றது. இத் தட்டெழுத்துப் பிரதிகளின் ஆசிரியரும் முன்னையவர் தான் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. ஆனால், அவர் தனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையெனக் கூறித் திரிகின்றார்.

இத் தட்டெழுத்துப் பிரதிகளின் தலைப்பு "நான் மறந்து விட்டாலும்" (Lest I Forget) என்றிருப்பதுடன், 1962ல் முயன்று தோல்வியடைந்த சதிக்கு ஒரு பெரும் யூ. என். பி. அரசியல்வாதிதான் சூத்திரதாரி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்த சர். ஒலிவர் "பிரிமியர் ஸ்டேக்ஸ்" ஸை விட இதில் டைனமைட் கூடுதலாகவுள்ளது என குறிப்பிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதுமட்டுமல்லாமல், அண்மையில் ஜே. ஆர். ஜயவர்த்தனவிற்கும், திருமதி. பண்டாரநாயக்காவிற்கும் பேச்சுவார்த்தை நடைபெற்றதாகவும், ஜே. ஆர். தனது அமைச்சில் சதிக் குற்றவாளிகளுக்கு முக்கிய பதவிகள் அளிக்கின்றார் என்ற குற்றச்சாட்டு தவறானது என்றும், தான் வெறுமனே உத்தரவுகளை நிறைவேற்றுவதாகவும் சதிக்குப் பின்னால் உள்ள நபர் வேறு ஒருவர் என்றும் திருமதியிடம் சொன்னதாகவும் கூறப்படுகின்றது.

பெப்ரவரி மாதம் 5ந் தேதி பாராளுமன்றத்தில் பிரதமர் கொதிப்படைந்து வெட்கம்கெட்ட முறையில் நடந்ததற்கு இந்த நிலைமைதான் காரணம் போல் தெரிகிறது. பாராளுமன்றம் "கள்வர்களின் குகை" என்று கம்பஹா தொகுதி பிரதிநிதி அடிக்கடி கூறும் கூற்று நிரூபிக்கப்படுவதைக் கண்டு அவர் ஏக்காளமிடாமல் வேறு என்ன செய்வது.

# பண்டாரநாயக்காக்களும், ஒபயக்சேகராக்களும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் வேறு ஒரு விதத்தில் பிளவு தோன்றுகிறது என்பதை கம்பஹா எமக்கு நினைவுபடுத்துகின்றது. சென்ற வாரம் நாம் குறிப்பிட்டிருந்ததைப் போன்று பிரபுத்துவ, ராஜபரம்பரை முறையில் திருமதி பண்டாரநாயக்கா ராஜகுமாரனை தனது மகன் அனுராவுக்கு பாராளுமன்ற ஆசனம் ஒன்றைத் தேடித் திரிகின்றார். அதன் மூலம் ஜீ. சி. ஈ. பரீட்சையில் கூட தேர்வு அடையாத தனது மகனை பாராளுமன்ற அரசியலில் புகுத்தி அதன் மூலம் தந்தையின் தரத்திற்கு புகழ் பெறச் செய்யலாம் என எதிர்பார்க்கிறார்.

திருமதி பண்டாரநாயக்கா ஒபயசேகராக்களிடம் மிரிகம தொகுதியை அனுராவுக்கு விட்டு கொடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆத்திரமடைந்த ஒபயசேகராக்கள் திருமதி பண்டாரநாயக்கா ரத்வத்தை குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும், அவர் பலாங்கொடையில் அல்லது ரத்னபுரியில் போட்டியிடட்டும் என்றும், அனுராவுக்கு அத்தனகல்லையைக் கொடுக்கும்படியும் சொன்னதாகக் கூறப்படுகிறது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப்போல் காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆரம்பத்தில் ஒபயசேகராக்களின் செல்வாக்கில்தான் அத்தனகலைத் தொகுதியில் வெற்றி பெற்றார் என்றும் சுட்டிக் காட்டியதாகத் தெரிகிறது.

இதற்கு முகம் கொடுக்க முடியாத ஸ்ரீமாவோ பீலிக்ஸைப் பார்த்து கம்பஹாவுக்குப் போகும்படியும், தொம்பே ஆசனத்தை அனுராவுக்கு கொடுக்கும்படி கேட்டுள்ளதாகத் தெரிகிறது. பீலிக்ஸ் ஒரு புத்திசாலி. அவர் அனுராவுக்கு தொம்பேயை விட்டுக் கொடுக்க சம்மதித்துள்ளதாகத் தெரிகிறது. ஆனால், கம்பஹாவிற்குச் சென்று அவமானப் படுவதற்கும் தயாரில்லையென்றும் தெரிகிறது.

பராளுமன்ற ஜனநாயகத்தின் கழுத்தறுப்பு இவ்வாறு கின்றது.

# பெர்லின் நெருக்கடிக்குப் பின்னால்

சென்ற வாரம் மேற்கு ஜெர்மன் பாராளுமன்றம் ஜனாதிபதி தேர்தலை மேற்கு பெர்லினில் நடத்துவதற்கு எடுத்த சட்டவிரோதமான முடிவைப்பற்றி கூக்குரல்கள் பல கேட்டன. முதலாளித்துவப் பத்திரிகைகள் பல இது பற்றிய செய்தியை குழப்பியடித்து வாசகர்கள் பிரச்சினையைப் புரிந்துகொள்ள முடியாமல் செய்துவிட்டன. ஆதலால், சரியான நிலைமையை விலக்குவது அவசியம் என நாம் கருதுகிறோம்.

சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நான்கு நாடுகளும் சேர்ந்துதான் ஹிட்லர் ஜெர்மனியைத் தோற்கடித்தன. பொஸ்டாம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஜெர்மனி நான்கு பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிராந்தியமும் வெற்றி கொண்ட நாடுகள் ஒவ்வொன்றினாலும் ஆளப்படுவதாக இருந்தது. ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் சோவியத் செஞ்சேனையினால் விடுவிக்கப்பட்டு, சோவியத் பிராந்தியத்திலுள்ளது. ஆனால், பெர்லின் நகரையும் நான்கு பிராந்தியங்களாகப் பிரித்து நான்கு நாடுகளும் ஆளுவதென ஒப்புக்கொள்ளப்பட்டது. இவையெல்லாம் ஜெர்மனியின் ஐக்கியம் பற்றிய பேச்சுவார்த்தை கள்வரை எடுக்கப்பட்ட முடிவுகள்.

ஆனால், இந்த ஐக்கியம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் பிராந்தியங்கள் ஒன்றாக சேர்க்கப்பட்டு, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு எனப் பெயரிடப்பட்டது. இதுதான் இன்றைய மேற்கு ஜெர்மனி. சோவியத் பிராந்தியம் ஜெர்மன் ஜனநாயக குடியரசாக மாறியது. பெர்லினில், அமெரிக்க, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் பிராந்தியங்கள் ஒன்றாக்கப்பட்டு, தனக்கென விசேஷமான ஒரு தரத்தில் மேற்கு பெர்லின் எனக் குறிப்பிடப்பட்டது.

மேற்கத்திய வல்லரசுகளின் ஆதிக்கத்தில் தனது பிராந்தியத்திற்குள்ளே மேற்கு பெர்லின் இருப்பதை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு எதிர்த்து வந்துள்ளது. குருஷ்சேவ் பயமுறுத்தி, கூக்குரலிட்டபோதிலும் எதுவுமே நடைபெறவில்லை. பிரச்சனை தீர்வுகாணப்படவில்லை.

மேற்கு ஜெர்மனியர்கள் தமது ஜனாதிபதி தேர்தல்களை தொடர்ச்சியாக மேற்கு பெர்லினில் சட்டவிரோதமாக நடத்தி வந்துள்ளனர். ஆத்திரமூட்டுவதற்கும், ஜெர்மன் ஜனநாயக குடியரசுக்கு ஆதரவாக சோவியத் யூனியன் எவ்வளவு தூரம் செல்லும் என்பதை பரீட்சிப்பதற்காகவும் இதனைப் பயன்படுத்துகின்றனர். இந்தத் தடவையும் அவர்கள் வெற்றிகரமாக தமது வேலையைச் செய்து முடித்துள்ளனர். பாராளுமன்றப் பிரதிநிதிகள் மேற்கு பெர்லினுக்குச் செல்வதை தடுப்பதற்கு சோவியத் யூனியன் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஜெர்மன் ஜனநாயக குடியரசின் ஊடாகச் செல்லும் தரைப் பாதையை தடை செய்தபோதிலும், விமானப் பாதையைத் தடை செய்யவில்லை. அதனால் அவர்கள் சுலபமாகச் சென்றார்கள்.

இங்கு குறிப்பிடத்தக்க விசயமென்னவென்றால் மேற்கு பெர்லின் சட்டரீதியாகவோ அல்லது வேறு விதத்திலோ மேற்கு ஜெர்மன் பாராளுமன்றத்திற்கு மேற்கு பெர்லினிலிருந்து பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதில்லை. ஆகையால் மேற்கு ஜெர்மன் பாராளுமன்றக் கூட்டம் மேற்கு பெர்லினில் நடத்தப்படுவதின் பொருள் அதன் பாராளுமன்றம் தனது நாட்டு எல்லைக்கு வெளியே நடக்கிறது என்பதாகும். இதுவும் சட்டவிரோதமானதே.

ஆனால், சோவியத் திரிபுவாத ஆளும் கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும், மேற்கு ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுடனும் சமாதான சகஜீவனம் நடத்தும் முயற்சியில் ஜெர்மன் ஜனநாயக குடியரசுடன் சமாதான ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடத் தயாரில்லை. பலதடவை குருஷேவ் வாக்களித்து இதுவரை செயல்படுத்தாத சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடுவதின் மூலம், ஒற்றர்கள் தங்குமடமான மேற்கு ஜெர்மனியை ஒழித்துக்கட்டி ஜெர்மன் ஜனநாயக குடியரசின் சுதந்திரத்தையும், சுயாதிபத்தியத்தையும் பாதுகாக்க சோவியத் திரிபுவாத ஆளும் கும்பல் தயாரில்லை.

# புதிய ஜார்கள் ஒழிக!

**மக்கள் சீனத்தில் வெளிவரும் 'மக்கள் தினசரி'' யும், ''விடுதலைச் சேனை தினசரியும்'' யும் மார்ச் 4 ந் தேதி கூட்டாக வெளியிட்ட தலையங்கம் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது. — ஆர்**

மார்ச் 2-ம் திகதி, சீனாவின் ஹெய் லுங் கியாங் மாகாண உஸ்ஸூறி நதியில் சென்பாஒ தீவிற்குள் ஊடுருவல் செய்து, சீன மக்கள் விடுதலைச் சேனையின் எல்லைப்புற காவற் படையினர் மீது பீரங்கி, துப்பாக்கி பிரயோகம் செய்து, அவர்களில் அநேகரைக் காயப்படுத்தி, கொன்று குவிப்பதற்கு சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் ஆயுதம் தாங்கிய படைவீரர்களை அனுப்பியது. சோவியத் திரிபுவாதிகளால் நடத்தப்பட்ட ஒரு எல்லையற்ற பாரதூரமான எல்லைப் பிரதேச ராணுவ ஆத்திரமூட்டலாகவும், அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு வெறித்தனமான சீன எதிர்ப்பு சம்பவமாகவும் இருப்பதுடன், சமூக ஏகாதிபத்தியமான சோவியத் திரிபுவாதத்தின் கொடிய தன்மையின் மற்றுமொரு பெரும் அம்பலமாகவும் இருக்கின்றது. சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலினுல் புரியப்பட்ட மலை போன்ற இக் குற்றத்திற்கு சீன மக்களும், சீன மக்கள் விடுதலைச் சேனையும் தமது பெரும் கோபத்தைம், வெறுப்பையும் தெரிவிப்பதுடன் அதற்கு எதிராக வன்மையான ஆட்சேபத்தையும் தெரிவிக்கின்றுர்கள்.

## திட்டமிட்ட ஆத்திரமூட்டலுக்கு சரியான தண்டனை

இந்த பாரதூரமான ராணுவ ஆத்திரமூட்டலான எல்லைப்புற சம்பவம் சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலினுல் ஏற்கனவே பூரணமாகத் திட்டமிட்டு வேண்டுமென்றே உருவாக்கப்பட்டது. உஸ்ஸூறி நதியிலுள்ள சென்பாஒ தீவு சீன ஆட்சி அதிகாரத்தின் கீழ் உள்ள பிரதேசமாக இருக்கிறது. எமது சொந்த பூமியைக் காவல் காப்பதற்கு எல்லைபுற காவற் படையினரின் புனிதமான உரிமையாக அது இருக்கின்றது. அப்படியிருந்தும், சீனாவின் பிரதேசத்திற்குள் ஊடுருவல் செய்து எமது காவற் படை மீது தாக்குவதற்கு பெருந்தொகை ஆயுதந் தாங்கிய படையினர்களையும், கவச மோட்டார்களையும், மோட்டார் வாகனங்களையும் சோவியத் திரிபுவாத அதிகாரிகள் அனுப்பிவைத்தனர். எமது எல்லைப்புற காவற்படையினர் சோவியத் திரிபுவாதிகளின் எல்லைபுற துருப்புகளுக்கு திரும்பத் திரும்ப எச்சரிக்கைகளைக் கொடுத்தனர். ஆனுல், அது எதுவித விளைவையும் உண்டாக்கவில்லை. தமது பொறுமையின் எல்லைக்குச் சென்றுவிட்ட பொழுதுதான் எமது எல்லைப்புற காவற் படையினர், தற்பாதுகாப்பிற்காக எதிர்த்துப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டு, ஆத்திரமூட்டல்களைச் செய்த ஊடுருவல்காரர்களுக்கு போதியளவு தகுந்த தண்டனையைக் கொடுத்து, சீனாவின் புனித பிரதேசத்தை வெற்றிகரமாகப் பாதுகாத்தனர். தாய்த் திருநாட்டின் ஆதிக்கத்திற்குட்பட்ட பிரதேச ஆட்சியை பாதுகாப்பதில் வீரமிக்க எல்லைப்புற காவற்படையினரின் நியாயமான நடவடிக்கைக்கு தமது மிக உறுதியான ஆதரவைக் கொடுப்பதற்கு சீனா முழுவதிலுமுள்ள படைவீரர்களும் பிரஜைகளும் சபதமேற்றுள்ளார்கள்.

## போலிக் குற்றச்சாட்டு

இந்த பாதூரமான எல்லைப்புற ஆத்திரமூட்டல் சம்பவத்தை உண்டாக்கிய பின்பு சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல், பொய்யான எதிர்க் குற்றச் சாட்டுக்களைச் செய்து சீனாவிற்கு ஒரு போலி ''ஆட்சேபக் குறிப்பை'' அனுப்பி திமிருடன் நடந்துள்ளது. சென்பாஒ தீவு அதனுடைய ஆட்சியுரிமைக்குற்பட்ட பிரதேசமென்று இது வெட்கமின்றி கூற, சீன எல்லைப்புற காவற்படையினர் ''சோவியத் அரசு எல்லையைத் தாண்டிவிட்டனர்'' என்று கூறிக்கொண்டு, சென்பாஒ தீவின் பிரதேசத்தை 'பாதுகாக்கும்' சோவியத் திரிபுவாதிகளின் எல்லைப்புற துருப்புகள் மீது ஒரு ''ஆத்திரமூட்டும் தாக்குதலை'' நடத்தினர் என்று கூறினர். இது வெறும் அர்த்தமற்றது. சென்பாஒ தீவு சீன ஆட்சி உரிமைக்குற்பட்ட பிரதேசமாக இருக்கிறது என்பது ஒரு மறுதலிக்க முடியாத உறுதியான உண்மையாக இருக்கின்றது. ரஷ்ய ஜார் ஏகாதிபத்தியத்தினுல சீன மக்கள் மீது திணிக்கப்பட்ட சமத்துவமற்ற உடன்படிக்கையான 1860, பீகிங் சீன—ரஷ்ய உடன்படிக்கையின்படிகூட சென்பாஒ தீவு சீனாவிற்கு சொந்தமாக இருக்கின்றது. அது எல்லா நேரத்திலும் சீனாவின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் நீண்டகாலமாகவே சீன எல்லைக் காவற் படையினரால் காவல்காத்து வரப்படுகிறது. ''சோவியத் அரசு எல்லை'' யின் பக்கத்திற்குள் சென்பாஒ தீவு பிரதேசம் எப்படி திடீரென ஓடியது? சீன ஆட்சி அதிகாரத்திற்குற்பட்ட பிரதேசத்தின் இந்தப் பகுதி எப்படி சோவியத் திரிபுவாதிகளின் காவற் துருப்புகளால் ''பாதுகாக்கப்பட்ட'' ஒரு பிரதேசமாகியது?

உண்மை என்னவென்றுல், சீன ஆட்சி உரிமை பிரதேசமான சென்பாஒ தீவிற்குள் உங்களுடைய துருப்புகளே படையெடுத்து வந்து சீன எல்லைக்காவற் படையினர் மீது வெறித்தனமான தாக்குதலை தொடுத்ததாகும். ஆனுல், சோவியத் திரிபுவாதிகளாகிய நீங்கள் சீன எல்லைக் காவற் படையினர் ஒரு ''ஆத்திரமூட்டும் தாக்குதலை'' நடத்தினர் என்று பொய்யான எதிர் குற்றச் சாட்டுகளைச் செய்துள்ளீர்கள். கறுப்பை வெள்ளை என்று கூறி, ''கள்ளனே கள்ளனைப் பிடி'' என்று குளறுவதின் ஆவலான தந்தரத்தைப் பாவிப்பதன் மூலம் உங்களுடைய ஆக்கிரமிப்புக் குற்றதை மூடிமறைக்கும் உங்களுடைய முயற்சியில் எள்ளளவும் நீங்கள் வெற்றி பெற மாட்டீர்கள்.

## சீனாவை அவதூறு செய்யும் நோக்கம்

சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் சீன மக்கள் சம்பந்தமாக தொடர்ந்து பகையுள்ளதாக இருந்து வருகின்றது. குறிப்பாக சீன மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப்புரட்சியை நடத்தி புரட்சியில் மகத்தான தீர்மானமளிக்கின்ற வெற்றியை ஈட்டியதிலிருந்து சீனாவிற்கு எதிரான நடவடிக்கைகளை செய்வதற்கு, பயமும் வெறுப்பும் நிரம்பிய சோவியத் திரிபுவாத துரோகக்கும்பல் தனது பிரயத்தனங்களை இரட்டிப்பாக்கியுள்ளது. சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் வேண்டுமென்றே சீனாவை அவதூறு செய்து இழிவுபடுத்தி, அதற்கெதிராக குடைகவிழ்ப்பு சீரழிவு வேலைகளைச் செய்தது மாத்திரமல்லாமல், சீனாவின் ஆட்சி உரிமைக்குற்பட்ட நில, ஆகாய எல்லைகளுக்குள் திரும்பத் திரும்ப ஊடுருவல் செய்து, எல்லை மோதல்களை உண்டாக்கி எமது நாட்டிற்கு இராணுவ அச்சுறுத்தலைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற படைகளை பெருமளவில் குவித்துக் கூட இருக்கின்றது. சீனாவிற்கு எதிராக சுற்றிவலைக்கும் ஒரு போலி கூட்டத்தை உருவாக்கும் ஒரு முயற்சியில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் சகல பிற்போக்குடனும் ஒத்துழைப்பதற்கு சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் தன்னுல் இயன்றமட்டும் செய்துள்ளது, இராணுவ ஆத்திரமூட்டலுக்காக சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலினுல் சீனாவின் சென்பாஒ தீவிற்குள் அண்மைய ஊடுருவல் அதன் சீனாவிற்கெதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கு வெளிப்படையாக எடுக்கப்பட்ட ஒரு புதிய நடவடிக்கையாக இருக்கின்றது.

## புதிய ஜார்கள்

எல்லைமோதல்களை உருவாக்குவதற்கு சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலினுல் சீனாவின் ஆட்சி உரிமைப் பிரதேசத்திற்குள் திரும்பத் திரும்ப செய்யப்பட்ட இராணுவ ஊடுருவல்கள், இந்த கைப்பிடியளவு துரோகிகள் வெளிப்படையாகவே சமூக ஏகாதிபத்தியவாதிகளாகவும், புதிய ஜார்களாவும் இருக்கின்றுர்கள் என்பதை தெளிவாகப் பார்ப்பதற்கு உலக முழுவதிலுமுள்ள மக்களுக்கு மீண்டுமொரு முறை வகை செய்துள்ளது. அவர்கள் தங்களுடைய விருப்பத்திற்கிணங்க கிழக்கு ஐரோப்பிய மக்களை மிருகத்தனமாக அடக்கி ஒடுக்கியதுடன், செக்கோஸ்லவாக்கியாவை முற்றுகையிடுவதற்கு பல்லாயிரக் கணக்கான துருப்புகளைக் கூட அனுப்பி, ஜார் மன்னனது ஒரு காலனித்துவ சாம்ராஜ்யத்தை நிறுவும் ஒரு முயற்சியில் தமது செல்வாக்கு மண்டலங்களாக கிழக்கு ஐரோப்பாவில் பெரும் விஸ்திரணமுள்ள நிலப்பரப்பை குறிப்பிட்டுள்ளார்கள். அதே வேளையில் ஆசியாவிலும் இதே மார்க்கத்தை அவர்கள் செலுத்துகின்றுர்கள். அவர்கள் மங்கோலிய மக்கள் குடியரசை தங்களுடைய காலனியாக மாற்றியது மாத்திரமல்லாமல், சீனாவின் ஆட்சி அதிகாரத்திற்குற்பட்ட பிரதேசத்திற்குள் மேலும் சென்று முற்றுகையிடுவதற்குக் கூட வீணுக முயற்சிக்கிறுர்கள். ஜார் ஒரு காலத்தில் முற்றுகையிட்டிருந்த அந்த பிரதேசங்களை இவர்கள் தமது பிரதேசங்களாக கருதிக்கொண்டு, ஜார் முற்றுகையிட்டிராத பிரதேசங்களிலும் தமது கரங்களை நீட்டுகிறுர்கள். ஜார்களிலும் பார்க்க இவர்கள் இன்னும் அதிக பெரும் தீனிக்காரர்களாக இருக்கின்றுர்கள்.

இதர தேசங்களின் ஆட்சி உரிமைக்குற்பட்ட பிரதேசத்தில் முற்றுகையிட்டுக்கொண்டு, தான் விரும்பியபடி அவர்களுடய சுயாதிபத்திய உரிமைக்குள் நுழைந்து ஒவ்வொரு இடத்திலும் முரட்டுத்தனமாக சவாரிசெய்துகொண்டிக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளினதும், சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலினதும் கொள்ளைக்காரச் செயலுக்கும் இடையிலுள்ள வித்தியாசமென்ன?

1900 ஆண்டில் லெனின் ''சீனாவில் யுத்தம்''என்ற தமது கட்டுரையில் சீனாமீது ''காட்டுமிராண்டிகளைப்போல்'' படையெடுத்த ஜார்களின் குற்றங்களை கோபாவேசமாக கண்டித்துள்ளார். ''சீனாவில் ஜார் அரசாங்கத்தின் கொள்கை ஒரு கொலைபாதகக் குற்றமுள்ள கொள்கையாக இருக்கின்றது'' என்று அவர் சுட்டிக் காட்டினுர். ''இந்த விஷயத்திலும், எல்லா நேரத்தையும் போல, கொடுங்கோல் ஜார் அரசாங்கம், முதலாளித்துவ பெரும் புள்ளிகளுக்கும், பிரபுக்களுக்கும் முன்னுல் அடிமைத்தனமாக இச்சகம் பேசும் பொறுப்பற்ற அதிகாரிகளின் ஒரு அரசாங்கமாக தன்னை நிரூபித்துவிட்டது.'' ஜார்களுடைய அங்கிகளை எடுத்துக் கொண்ட சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலின் வெட்கமற்ற அம்சங்களை எடுத்துக் காட்டுவதற்கு லெனினுடைய இந்த வார்த்தைகளை இன்று பாவிக்க முடியும்.

## சோவியத் மக்களின் எதிர்ப்பை திசை திருப்ப

எமது தேசத்திற் கெதிரான சோவியத் திரிபுவாதத் துரோக்க் கும்பலினுல் செய்யப்பட்ட இராணுவ ஆத்திரமூட்டல், உள்நாட்டு, வெளிநாட்டு தொல்லைகளினுல் சூழப்பட்டு, ஒரு இக்கட்டான நிலையில் தன்னை உள்ளாக்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், அதன் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளின் தேவைக்கு எடுக்கப்பட்ட ஒரு வெறித்தனமான நடவடிக்கையாக இருக்கின்றது. இப்படிச் செய்வதில் அதன் பிற்போக்கு பூர்ஷுவா பாசிஸ ஆட்சிக்கு எதிராக தினசரி வளர்ந்து வரும் வெறுப்பும், எதிர்ப்பும் கொண்ட சோவியத் மக்களின் கவனத்தை திசைதிருப்பும் நோக்கத்துடனும், அதே வேளையில் ஒரு உலகம் பரந்த எதிர்ப்புரட்சிப் பேரம் பேசுவதற்காக அமெரிக்காவும், சோவியத் யூனியனும் பிரவேசிக்கக் கூடியவகையில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தாஜா பண்ணி, புதிய நிக்ஸன் நிர்வாகத்திடமிருந்து சலுகைகள் பெறுவதற்கும், சீனாவிற்கு எதிரான உணர்ச்சியைத் தூண்ட அது முயற்சிக்கின்றது. ஒருபுதிய சீனாவிற்கெதிரான மோதலை உருவாக்குவதன் மூலம் தங்களுடைய இக்கட்டான நிலையிலிருந்து தங்களை விடுவிக்க முடியும் என்று சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் எண்ணுகின்றது. ஆனுல் விளைவு அதற்கு மாருக இருக்கின்றது. சீனாவினதும் சோவியத் யூனியனதும் மக்கள் தமக்கிடையில் ஒரு ஆழமான புரட்சிகர நட்புறவை உடையவர்களாக இருக்கின்றுர்கள். சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலினுல் உருவாக்கப்படும் சகல சீன எதிர்ப்புத் திட்டங்களும் நிச்சயமாக தோல்வி அடையும். சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலின் இந்த மூர்க்கத்தனமான செயல், அதன் எதிர்ப்புரட்சி அம்சங்களை இன்னும் அதிக தெளிவாக அம்பலப்படுத்தி சோவியத் மக்களிடமிருந்தும், உலக முழுவதிலுமுள்ள மக்களிடமிருந்தும், இன்னும் அதிக பலமான எதிர்ப்பைத் தூண்டுவதற்கும் மாத்திரம் தான் உதவி செய்யும். அதன் சொந்த பெருவிரல்களை நசிப்பதற்கு ஒரு கல்லைத் தூக்குவதைப்போல, சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் அதன் சொந்த அழிவை மாத்திரம் துரிதப்படுத்தும்.

எமது சிறந்த முதல்வர் மாஒ சுட்டிக்காட்டியுள்ளார்: ''வரலாற்று ரீதியாக, அழிவின் எல்லையிலிருக்கும் சகல பிற்போக்குச் சக்திகளும் புரட்சிகர சக்திகளுக்கு எதிராக ஒரு இறுதிமரணப் போராட்டத்தை தவிர்க்க முடியாமல் நடத்தும்.'' இதைத்தான் சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் செய்து கொண்டிருக்கின்றது. சீனாவிற்கெதிரான, அதனுடைய அண்மைய ராணுவ ஆத்திரமூட்டல் அதனுடைய இயற்கையாயமைந்த பலவீனத்தின் தெளிவான ஒரு வெளிப்பாடாக இருக்கின்றது.

## ஒழித்துக் கட்டுவோம்

சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலை நாம் எச்சரிக்கின்றேம்: சீனாவின் ஆட்சியுரிமைக்குட்பட்ட பிரதேசத்திற்குள் ஊடுருவல் செய்வதற்கு எவரையும் அனுமதிக்க மாட்டோம். நாம் தாக்கப்படும்வரை, நாம் தாக்கமாட்டோம்; நாம் தாக்கப்பட்டால், நாம் நிச்சயமாக பதிலுக்கு தாக்குவோம். ஏனையோரால் சீன மக்கள் கொடுமைபடுத்தப்பட்ட நாட்கள் மலையேறி விட்டன. ஜார் ரஷ்யாவின் பழைய தந்திரங்களை மேற்கொள்வதன் மூலம் மகத்தான சீன மக்களுடன் நீங்கள் பேரம்பேச முடியும் என்று நீங்கள் எண்ணினுல் நீங்கள் வெறும் குருடர்களாகவும், பகல்கனவு காண்பவர்களாகவுமிருக்கின்றீர்கள். ராணுவ ஆத்திரமூட்டல் செய்வதை நீங்கள் தொடர்வீர்களானுல், நீங்கள் நிச்சயமாக கடுமையான தண்டனையைப் பெறுவீர்கள். எவ்வளவு பலத்துடனும் யாருடனும் நீங்கள் வந்தாலும் பரவாயில்லை, நாங்கள் உங்களை நிச்சயமாக உறுதியுடன் முற்றுமுழுதாக, பூர்ணமாக, அறவே ஒழித்துக்கட்டியே தீருவோம். மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியில் புடம் போடப்பட்ட, மா சே—துங் சிந்தனையினுல் ஆயுதபாணிகளாகப்பட்ட 70 கோடி சீன மக்களும், சீன மக்கள் விடுதலைச் சேனையும் முன்னெப்பொழுதையும்விட அதிக பலமுடையவர்களாக இருக்கின்றுர்கள். எமது சோஷலிஸத் தாய்த் திருநாட்டை படையெடுப்பதற்கு எவர் துணிந்தாலும் சரி, அவர்கள் தவிர்க்க முடியாதபடி மிக மோசமாக அடிக்கப்பட்டு தவிடுபொடியாக்கப் படுவார்கள்!

புதிய ஜார்கள் ஒழிக! சோவியத் திரிபுவாத சமூக ஏகாதிபத்தியம் ஒழிக!

# ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடவே நாம் குழந்தைகளைப் பெற்றோம்

## உலக வலம்

உஸ்மான்

உலக மக்களின் முதல் நம்பர் எதிரி அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து துருக்கி மக்கள் நடத்தும் போராட்டம் புதிய கட்டத்தை அடைந்துள்ளது. அண்மையில் துருக்கி துறைமுகங்களில் நுழைந்த அமெரிக்க 6வது கடற்படைக்கு எதிராக துருக்கி மக்கள் பிரமாண்டமான அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அலை அலையாக நடத்தினார்கள். இப் பரந்த வெகுஜன நடவடிக்கை நாடு பூராவும் பரபரப்பான நிலையை ஏற்படுத்தியது. அமெரிக்க கப்பல் படையைச் சேர்ந்த தளபதிகளும், துருப்புகளும் தெருக்களில் அடியெடுத்து வைக்க முடியாமல் கப்பல்களிலும், ஹோட்டல்களிலுமே பதுங்கிக் கிடந்தார்கள். ஒரு வாரப் போராட்டம் அமெரிக்க 6வது கப்பல் படையைத் துருக்கி துறைமுகங்களைவிட்டு வெளியேற்றியது.

## துருக்கி தாய்களின் வீரகர்ஜனை சகல ஏகாதிபத்தியங்களின் கழுத்துகளை இறுக்கிய சுருக்காக விழுந்தது

## லாவோஸ் மக்கள் அமெரிக்காவுக்கு கொடுக்கும் உதை சோவியத் திரிபுவாதிகளுக்கு இதயத்தில் விழுகிறது

அமெரிக்க 6வது கடற்படையைச் சேர்ந்த 5 போர்க் கப்பல்கள் துருக்கியின் பெரிய துறைமுகமான இஸ்தான்புல்லிலும், இஸ்மிர் துறைமுகத்திலும் ''நல்லெண்ண வருகை'' என்ற போலி வேஷமிட்டு உட்புகுந்தன. இந்த ''நல்லெண்ண வருகை'' துருக்கி மக்களின் கோபத்தை அனல் காற்றாய் மாறச் செய்தது. ஆயிரம் ஆயிரம் மக்கள் குறிப்பாக மாணவர்கள்—வாலிபர்கள் துருக்கியின் தலைநகரான அங்காராவிலும், இஸ்தான்புல், இஸ்மிர் மற்றும் நகரங்களிலும் கொந்தளித்து பொங்கியெழும் கடலைப் போன்ற ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொங்கு சதையான துருக்கி அரசாங்கத்தின் சகல அடக்குமுறைகளை எதிர்த்து வீதிகளில் கைகலந்து போராடினார்கள். ''யங்கிகளே வெளியேறுங்கள்! அமெரிக்க 6வது கப்பல்படைக்கு துருக்கி விபசார விடுதியல்ல! அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக! துருக்கி சுதந்திரத்தை நேசிக்கிறது! துருக்கி நேட்டோவை விட்டு வெளியேறட்டும்! என விண்ணதிர கோஷங்களை எழுப்பினார்கள். வயது முதிர்ந்த தாய்மார்கள் நாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடவே குழந்தைகளைப் பெற்றோம் என்ற கோஷ அட்டைகளை தங்கள் உடம்பில் அணிந்துகொண்டு, முஷ்டிகளை உயர்த்தி ஊர்வலங்களில்முழங்கினார்கள். இக் கோஷங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், சகல ஏகாதிபத்தியங்களினதும் கழுத்துக்களை இறுக்கிய சுருக்காக விழுந்தன.

அமெரிக்க ராணுவ உடைகளையும், சின்னங்களையும், அமெரிக்க தூதுவர் ரொபட் கோமரினதும், யுத்தக் கப்பல்களினதும் கொடும்பாவிகளை நடுத் தெருவில் தீயிலிட்டுப் பொசுக்கினார்கள். அங்காராவிலுள்ள அமெரிக்க ராணுவத்தின் தலைமை நிலையத்தை தாக்கி தீயிட்டார்கள். அமெரிக்க ராணுவ, பொருளாதார வர்த்தக ஸ்தாபனங்களின் கார்களை மற்றும் உடமைகளுக்கும் பெரும் சேதத்தை விளைவித்து, அமெரிக்க ராணுவ ஆலோசகர்களை கண்கண்ட இடங்களிலெல்லாம் தாக்கி ஓட ஓட விரட்டி அடித்துள்ளார்கள். இஸ்தான்புல் சட்டக் கல்லூரி கட்டிடத்தின் உச்சியில் மாணவர் போராட்டங்களில் உயிர் நீத்த தியாகி ஒருவரின் உருவம் தாங்கிய போராட்டக் கொடியை உயர்த்தியிருந்தார்கள் சர்வகலாசாலை மாணவர்கள்.

துருக்கி மக்களின் தீவிரமான அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் மிக ஆழமானது. இரண்டாவது உலக யுத்த முடிவில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் தான் நடத்தும் ஆக்கிரமிப்புக்கும் மத்திய கிழக்கில் தனது கொள்ளைச் சுரண்டலை தொடர்ந்து நடத்துவதற்கும், இப் பகுதிகளில் நடைபெறும் தேசிய



## மாஓ சிந்தனை

அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான உலகத்து மக்களின் கோபாவேசப் பேரலை தடுக்க முடியாதது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிரான அவர்களுடைய போராட்டம் இன்னும் மிகப் பெரும் வெற்றிகளை நிச்சயம் ஈட்டும்.

விடுதலைப் போராட்டங்களை நசுக்குவதற்கும் துருக்கியை ஒரு கேந்திரதளமாகப் பயன்படுத்த முனைந்தது. துருக்கியில் தனது அடிவருடிகளை பதவியில் அமரச் செய்து அவர்களுடன் ''துருக்கியை அடிமை கொள்ளும்'' 54 ஒப்பந்தங்களை செய்துகொண்டது. அத்தோடு, துருக்கி பூராவும் 200 ராணுவ தளங்களை நிறுவி 20,000 துருப்புக்களையும் நிறுத்தி மத்திய கிழக்கில் தனது ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்கு துருக்கியை கேந்திர தளமாக ஆக்கிரமித்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் நேட்டோ ராணுவ கூட்டணியில் துருக்கியை இழுத்துக் கொண்டதோடு, துருக்கியிலுள்ள தனது அடிவருடிகளுக்கு துருக்கி ராணுவத்தைப் பெருப்பிக்க உத்தரவிட்டது. இதன்பலன், 3 கோடி 20 லட்சம் மக்களைக் கொண்ட துருக்கியில் 500,000 துருப்புகளைக் கொண்ட ஒரு பெரிய ராணுவம் உருவாகியது. நேட்டோ அணியிலுள்ள அமெரிக்க, பிரஞ்சுக்கு அடுத்த மூன்றாவது பெரிய ராணுவமாகும் இது. இந்த ராணுவத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் 'ஆலோசகர்களே' கட்டுப்பாடு செய்கிறார்கள்.

பொருளாதார ரீதியில் துருக்கி அமெரிக்க மூலதனத்தின் இரும்புப் பிடியில் சிக்கிவிட்டது. பெட்ரோலியம், குரோமியம், செம்பு கனிவள சுரங்கங்கள், பேங்க், கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் அமெரிக்க மூலதனம் ஊடுருவியுள்ளது. ஆக, துருக்கியின் அரசியல், ராணுவம், பொருளாதாரத்தைதனது கட்டுப்பாட்டுக்குள் இறுக்கி, பஞ்சம், பணவீக்கம், வேலையில்லாப் பிரச்சனையை உண்டு பண்ணி துருக்கி மக்களின் ரத்தத்தைக் குடிக்கிறது. கல்வித் துறையிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது அனுமார் வாலை நீட்டி துருக்கியிலுள்ள சர்வகலாசாலைகளை சுற்றி வளைத்து கொட்டம் அடிக்கிறது. பேராசிரியர்கள், விரிவுரையாளர்களில் பலர் அமெரிக்கர்களும், அதன் அடிவருடிகளுமே நிறைந்து துருக்கி மக்களின் கல்விக்கு இடையூறு விளைவிக்கின்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த பகல் கொள்ளையையும், ஆக்கிரமிப்பையும் எதிர்த்து துருக்கி தொழிலாளர் வர்க்கமும், மாணவர்களும் பெரும் போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்தினர்கள். இதனால், 1960ல் பிற்போக்கு மெண்ரீஸ் ஆட்சி வீழ்ச்சியுற்றது. எனினும், பிற்போக்குவாதிகள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டார்கள். கடந்த மூன்று வருட காலத்தில் என்றுமில்லாத அளவில் வெகுஜன ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள் பிற்போக்கு துருக்கி அதிகார வர்க்கத்தையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து வளர்ந்து வருகின்றன. அமெரிக்கா தனது புதிய ஸ்தானிகராக ரொபட் கோமரை துருக்கிக்கு நியமித்தபோது இப் போராட்டங்கள் புதிய கட்டத்தில் வளர்ச்சியுற்றன. ரொபட் கோமர் வியட்நாம் மக்களை படுகொலை செய்த மாபாவி. அமெரிக்க ஒத்து சேவையின் நிரந்தர ஊழியன். கடந்த வருடம் ஜனவரியில் அங்காராவில் இவன் வந்திறங்கியபோது, விமான நிலையத்தைச் சுற்றி மாணவர்கள்-தொழிலாளர்கள்—வாலிபர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள். இவன் பலத்த ராணுவ பாதுகாப்போடு ஒரு காரில் எலியைப் போல் பதுங்கிச் சென்றான். அங்காரா நகர் முழுவதும், உதையுங்கள் கொலைகாரனை! உதையுங்கள்! உதையுங்கள்! அமெரிக்க கொலைகாரனே வெளியேறு! என்ற கோஷமே இவனை வெருட்டியது.

துருக்கி மக்களின் இத்தகைய போராட்டங்களுக்கு சோவியத் நவீன திரிபுவாதிகள் பெரும் துரோகம் செய்கிறார்கள். அமெரிக்க கைப்பாவையான துருக்கி பிற்போக்கு ஆட்சியாளர்களுக்கு ''பொருளாதார உதவி'' அளிப்பதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து துருக்கி மக்களை சுரண்டப் பார்க்கின்றனர். அமெரிக்க 6வது கடற்படையை எதிர்த்த துருக்கி மக்களின் போராட்டங்களுக்கு அவர்கள் செய்த துரோகம் துருக்கி மக்களின் நண்பர்களல்ல அவர்கள் என்பதை நிரூபித்தது. சோவியத் திரிபுவாதிகளும் அவர்களது ஊதுகுழல்களும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சகபாடிகளே என்பதை துருக்கி மக்கள் அறிந்துகொள்ள முடிந்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும் எதிர்த்துப் போராடும் துருக்கி மக்களின் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்துவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை துருக்கியிலிருந்து விரட்டப்படும் நாள் தூரத்தில் இல்லை.

★

தென் கிழக்காசியாவிலே அமெரிக்க நோக்கங்கள் பற்றிச் சில காலத்துக்கு முன் இப்பகுதியில் நான் எழுதியிருந்தபோது, வியட்நாமிலேயிருந்து என்றோ ஒரு நாள் 'வெற்றிகரமாகப் பின்வாங்க' வேண்டிய நிலையில், அப்பிராந்தியத்திலுள்ள வேறு சில நாடுகளில் அமெரிக்க ஆக்கிரமிப்பும் ஊடுருவலும் வேகம் பெற்றிருப்பதைச் சுட்டிக் காட்டினேன். அதுபோலவே உலக மக்களது கவனம் வியட்நாம் மீது படிந்திருக்கையில் லாவோஸ்நாடு மற்றொரு வியட்நாமாக மாறிக்கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருந்தேன். சில நாட்களுக்கு முன் லாவோஸ் விடுதலை முன்னணி விடுத்த செய்தியறிக்கை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தபோது அங்கு எத்தகைய அமெரிக்கத் தலையீடு நடக்கிறது என்பது தெரிந்தது.

சமீபத்தில் சவனகெற் மாகாணத்தில் தேசிய விடுதலைப் படையினர் அமெரிக்க எப்-4 போர் விமானம் ஒன்றைச்

7-ம் பக்கம் பார்க்க

## இந்திய அரசியலில் அண்ணாதுரையின் பாத்திரம்-2

# முற்போக்கு முலாம் பூசிய அண்ணாதுரை

# பிற்போக்கின் பிரதிநிதி

## தமிழக நிலப்பிரபுத்துவ - முதலாளித்துவ நலன்களுக்காக சலியாது உழைத்தவர்

அண்ணாதுரை தோற்றுவித்து வழி நடத்திய தி.மு.க.வின் வித்து விதேசிகளுக்கு விற்று வாழ்ந்த மரபையுடை என்பதைச் சென்ற கட்டுரையில் காட்டியிருந்தோம். 1916-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளின் ஆசீர்வாதத்துடனும், அனுசரணையுடனும் ''தென்னிந்திய நல உரிமைச் சங்கம்'' என்ற பெயருடன் ஓர் அரசியற் கட்சி துவங்கப் பெற்றது. கட்சியின் கொள்கைகளைப் பிரசாரஞ் செய்யத் தொடங்கப்பட்ட பத்திரிகை ஆங்கிலத்தில் நடத்தப்பட்டது. பொது மக்களைச் சாராத கட்சி அது என்பதை ஆங்கில மொழிப் பத்திரிகையே காட்டிவிட்டது. கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் யாவர்? அக்காலத்திலே ''தமிழரின் தனிப் பெருந் தலைவர்'' என அழைக்கப்பட்ட சேர். பி. தியாகராயர், டாக்டர் டி. எம். நாயர், சேர். எஸ். முத்தையா, டாக்டர் சி. நடேச முதலியார், பனகல் அரசர், சேர். ஏ. இராமசாமி முதலியார், நாகை வி. பக்கிரிசாமி, சேர். எஸ். பன்னீர்ச் செல்வம், சேர். சண்முகனார் முதலிய கனதனவான்கள். இவர்கள் வெளியிட்ட அவ்வாங்கிலத் தினசரியின் பெயர் ஜஸ்டிஸ் நாளா வட்டத்தில் பத்திரிகையின் பெயராலேயே நிறுவனமும் ''ஜஸ்டிஸ் கட்சி'' (நீதிக் கட்சி) என வழங்கப்படலாயிற்று. ஜஸ்டிஸ் கட்சியினர் யாருக்கு நீதி கோரினர் என்பதே இங்கு எமது ஆராய்ச்சிக்குத் தேவை.

தி. மு. க. வளர்ந்த வரலாறு என்ற தொகுப்பு நூலிலே சீதாலக்ஷ்மி பின்வருமாறு கூறுகிறார்: ''ஜஸ்டிஸ்கட்சி என்றால் பெரிய சீமான்களின் கட்சி, வகுப்புவாத ஸ்தாபனம், வெள்ளையரின் அடிவருடி என்ற கருத்தை மாற்றிப் புதிய பாதையை அமைக்க (அண்ணா) அரிய பெரிய திட்டம் ஒன்றை வகுத்தார். அண்ணாவின் தீர்மானம் கட்சிக்கு மதிப்பையும் மக்களின் ஆதரவையும் திரட்டித் தந்தது; ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கழகம் என மாற்றமடைந்தது.''

### பழைய மொந்தையில் புதிய கள்ளு

கட்சியின் ''உத்தியோக பூர்வமான'' வரலாற்றாசிரியர் பெருமையுடன் கூறிக்கொள்ளும் இக்கூற்று கவனிக்கத் தக்கது. அண்ணாத்துரைக்குப் பெருமை தேடும் வகையில் பழைய (தாய்) கட்சி இழித்துரைக்கப் படுகிறது. ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி ஆசிரியர் கூறியது அத்தனையும் உண்மையே, அக் கட்சி சீமான்கள் நடாத்திய, ஏகாதிபத்திய பக்தர் இயக்கிய கட்சி என்று மக்கள் தெளிவாகக் இனம் கண்டுகொண்டனர். உண்மையை முற்றாக மறைத்துவிட முடியுமா? பொது மக்கள் தொடர்பற்ற சேர்களும், முதலியார்களும், டாக்டர்களும், ராஜாக்களும், அக்கட்சியின் சூத்திரதாரிகள் என்ற கருத்தை மாற்றி கட்சிக்குப்பொது மக்கள் தொடர்ப்பை அண்ணாதுரை (முதலியார்) ஏற்படுத்தினார் என்பதே ஆசிரியர் உணர்த்த விரும்பும் செய்தி. அதிலும் ஓரளவுக்கு உண்மை இருக்கிறது. ஆனால் ''மக்கள் தொடர்பு'' ஏற்பட்டதன் காரணமாகக் கட்சியின் அடிப்படையான வர்க்க நிலையும் அமைப்பும் மாறின எனக் கொள்ள முடியாது. அதுவே கவனிக்க வேண்டிய உண்மையாகும்.

ஜஸ்டிஸ் கட்சியிலும் அதன் வழி வழி வரும் நிறுவனங்களிலும் மிகுந்த அக்கறை கொண்டு உழைத்தவர்கள், தமிழ்நாட்டு நிலப்பிரபுக்களிற் பெரும் பகுதியினர். அந்த வகையில் பெரும் நிலக்கிழார்கள் (ஜமீந்தார்கள், மகாராஜாக்கள், பண்ணையார்கள்) நலனைப் பிரதிபலித்த கட்சி ஜஸ்டிஸ் கட்சியெனலாம். பழைய நிலமானிய சமுதாயத்தின் மிச்ச சொச்சங்கள் அக் ''பிரமுகர்கள்'' இவர்களுக்கு வெள்ளைக்காரனே சகலதும், அவன் தயவால் பட்டம் பதவி பெற்று வாழ்ந்தவர்கள் சேர். பி. டி. ராஜன் போன்றோர் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இவர்கள் நிலமானியப் பொருளாதார முறையை மாத்திரமன்றி, அதனோடு பிணைந்துள்ள பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், கருத்துக்கள் ஆகியவற்றையும் பேணி வந்தவர்கள். உதாரணமாகச் சமயத்துறையில் இவர்களுக்கு ஓரளவு ஈடுபாடிருந்தது. ஆனால், இந்திய உபகண்டத்திலே வேகமாக வளர்ந்து வந்த புதிய மத்தியதர வர்க்கம், பூர்ஷுவாக்கள் ஆகியோர் கடைப்பிடித்த ''முற்போக்கு'' அம்சங்கள் இப் பிரபுத்துவப் பெரும்புள்ளிகளிடத்துக் காணப்படவில்லை. அதாவது நிலமானியச் சாயலைக் கொண்டியங்கிய ஜஸ்டிஸ் கட்சிக்கும், அதன் வேலைத் திட்டங்களுக்கும் குறைந்த பட்சமான ''சீர்திருத்தம்'' அல்லது நவீன மயவாக்கம் அத்தியாவசியமாயிருந்தது. சுருங்கச் சொன்னால் ஓர் அரசியல் கட்சி போல அது இயங்குவதும், தோற்றமளிப்பதும் இன்றியமையாததாயிருந்தன. இத்திருப்பணியைச் செய்ய முன்வந்த கட்சிச் 'சேவகனே' பொருளாதாரத்தில் எம். ஏ. பட்டம் பெற்றிருந்த ''முழு நேர ஊழியன்'' சி. என். அண்ணாதுரை.

### உலக முதலாளித்துவத்தின் தாக்கம்

மார்க்ஸ் அற்புதமான முன்னறிவுடன் கூறியதுபோல சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து உலக முதலாளித்துவத்தின் தாக்கமும் சாயலும் தவிர்க்க இயலாதவாறு இந்தியாவிலும் படிந்து வந்தன. அதன் அரசியல் நிறுவன வெளிப்பாடாகவே தேசிய காங்கிரஸ் வளர்ந்து வந்தது. ''சுதேச'' சமஸ்தானங்களிலும் பிரிட்டிஷ் இந்தியாவின் பல பகுதிகளிலும் பெரு நிலப்பிரபுத்துவம் மிகுந்த செல்வாக்குடன் இருந்து வந்ததாயினும் (இன்றும் அதன் பிடிபலமாக இருக்கிறது) பொதுவாக இந்தியாவில் வளர்ந்துவரும் தத்துவம் பூர்ஷ்வா தத்துவமேயாகும். மார்க்ஸ் சுட்டிக்காட்டியதுபோல இந்திய முதலாளித்துவம் தனது சுயநலத்துக்காகப் பழைய நிலப்பிரபுத்துவக் கருத்துக்களைச் சாடியே தீரவேண்டியிருந்தது. நடைமுறையில் நிலப்பிரபுத்துவ அமைப்பு மாறாதிருந்தாலும் (அது சிறிது பலவீனமடையக் கூடும்) நவீன—பூர்ஷ்வாக் கருத்துக்களை ஓரளவுக்கு அது தழுவி ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அது மட்டுமல்லாது, காலக்கிரமத்தில் இப் பெரு—நிலக்கிழார்களே தமது வருவாயை மூலதனமாகக் கொண்டு கைத்தொழில் அதிபர்களாயும் உருமாற்றம் அடைகின்றனர். என்னவாயினும் நிலமானிய உணர்வுடன் இயங்கிய அரசியல் ''கிளப்'' வடிவில் இருந்த ஜஸ்டிஸ் கட்சியை பூர்ஷ்வா உருவத்தில் மாற்றிய பெருமை அண்ணாதுரைக்கு உண்டு.

அண்ணாதுரையின் ஆலோசனைப்படி (ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து) தி. க. தோன்றிய பின் திருச்சி மாநாட்டில் இப் புதிய பூர்ஷ்வா சித்திரம் தீட்டப் பெற்றது. அம் மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத் தலைவராக இருந்த வேதாசலம் பின்வருமாறு பேசினார்.

''இராமநாதபுரம் ராஜா தலைவராகவும் தன வணிகர் குலதிலகர் பெத்தாச்சி செட்டியார் வரவேற்புக் குழுத் தலைவராகவும் இருந்து, ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டை இதே திருச்சியில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடத்தினர். இன்று நான் வரவேற்புத் தலைவனாக இருக்கிறேன்; சாமான்யன்! எமது பெரியார் தலைவராக இருக்கிறார். அவர் ராஜா அல்ல.''

இதனை இலட்சிய வரலாறு என்னும் நூலில் எடுத்துக் காட்டிப் 'புதிய' வரலாற்றை விளக்கியிருக்கிறார் அண்ணாதுரை.

ராஜாக்கள் ''புதிய'' கட்சியில் இல்லை என்பதுபோன்ற பிரமையை உண்டுபண்ண முயல்கிறார் அண்ணாதுரை. ராஜாக்களும், சேர்களும்சிறிது பின்னால் புதிய கைத்தொழில் அதிபர்களும் அண்ணாதுரை போன்ற ஊழியர்களைக் கட்சி வேலை செய்ய விட்டுவிட்டுத் தமது நலன்களை இன்னுஞ் சிறப்பாகக் கவனித்துக் கொள்ளத் தொடங்கினர்; அதுதான் உண்மை. உதாரணமாக தி மு. க். வின் கலா சாரத் துறைப் பெரும் புள்ளிகளில் ஒருவரான கி. ஆ. பெ. விசுவநாதம் தன்னை ஒரு சாமான்யன் என்றுதான் வருணித்துக் கொள்கிறார். ஏதோ ஓர் எழுத்தாளன் என்றே பலர் எண்ணவுங் கூடும். ஆனால் அவர் திருச்சி மாவட்டத்தில் மிகப் பெரிய நிலக்கிழாரில் ஒருவர் என்பது வெளிப்படையாகத் தெரியாததொன்றே. வள்ளுவம் பேசும் விசுவநாதம் ''வணிகர் திலகம்''தான். நேற்று அண்ணாதுரையும் இன்று கருணாநிதியும் சரண் புகுந்துள்ள ராஜாஜியின் சுதந்திரக் கட்சி அசல் பெரு நிலப் பிரபுக்கள் நிறைந்து வழியும் கட்சி தானே. மாஜி மகாராஜாக்களது கட்சியல்லவா அது? ஆனால் மினு மஸானி போன்ற திறமையான பூர்ஷ்வா அரசியல் பொருளாதார தத்துவவாதிகள் அதன் மூளைகளாயுள்ளனர். அதுபோலவே ''மக்கள் தொடர்புடைய'' அண்ணாதுரை தி. மு. க. வின் செயலாளராக அமர்ந்து தமிழகப் பெருநிலக்கிழார்களுக்கும், முதலாளிகளுக்கும் ஏற்ற வகையில் ஓர் அரசியல் கட்சியை நடாத்திக் கொடுத்தார். அதுதான் தி. மு. க. வின் அடிப்படை.

### நிலபிரபுத்துவ சமூக உறவுமுறை

ஆனால் என்னதான் பூர்ஷ்வா பொருளாதாரப் பட்டங்கள் பெற்று வந்தபோதும் அண்ணாதுரையால் பல நிலப்பிரபுத்துவப் பழக்க வழக்கங்களைக் கட்சி வரலாற்றிலிருந்து நீக்க முடியவில்லை. அல்லது அவற்றை அகற்ற அவர் முயலவில்லை. கட்சியின் அமைப்பு ஒன்றே இதற்குச் சிறந்த விளக்கமாயமையும். நிலப்பிரபுத்துவ அமைப்பிலேயே ஆண்டான்—அடிமை, தலைவன்—பணியாள், பெரியார்—சிறியார், குரவர் (அரசன், உபாத்தியாயன், பெற்றோர், தமையன் ஆகியோர்) சிறப்பிடம் பெறுவர். திராவிடக் கழகத்தில் ஈ. வே. ரா. தந்தை என்ற நிலையில் பெரியாராக இருந்ததுவும், பின்னர் முன்னேற்றக் கழகத்திலே அண்ணாதுரை அண்ணன் என்ற நிலையில் அறிஞராக இருந்ததுவும் மற்றையோர் யாவரும் ஒவ்வோர் உறவுமுறை கொண்டு விளங்கியதுவும் அப்பழுக்கற்ற நிலப்பிரபுத்துவ அமைப்பேயாகும். இவ்வடிப்படையிலேயே தி. க. விலிருந்து அண்ணாதுரை கும்பல் பிரிந்து முன்னேற்றக் கழகத்தைத் தாபித்தனர். 17-9-1949 அன்று மாலை தி. மு. க. துவக்க விழா பெத்தாம்பாளையம் பெரு நிலக்கிழார் தலைமையில் சென்னையில் நடந்தேறியது. அதில் பிரதான பேச்சாளர் அண்ணாதுரை பலவற்றையும் அடுக்கி விளக்கிவிட்டு ஓரிடத்தில் பின்வருமாறு சொன்னார்:

''ஒரு குடும்பத் தலைவன் சதா தன் மக்களில் சிலரைப் பார்த்து 'நீ சோம்பேறி, வேலைக்கு லாயக்கற்றவன், வீணன்' என்று தூற்றிக் கொண்டேயிருந்தால் மகன் நிலை என்னவாகும்? சற்று விவேகமும் ரோஷமும் படைத்த மைந்தன் வீட்டை விட்டு வெளியேறி தன் வேலையின் திறத்தை, வெற்றியைக் காட்டுவான்! அதுபோலவேதான் நாமும் நம்மை மதியாத, இகழ்ந்த தூற்றலின் துச்சமென மதித்த தலைவரின் தலைமையை விட்டு வெளியேறித் தனிக் குடித்தனம், தனி முகாம், தனிக் கட்சி அமைத்திருக்கிறோம்.''

### கொள்கையல்ல, குடும்பச் சண்டை

ஒரு கட்சியின் தோற்றத்துக்குக் ''குடும்பச் சண்டை'' முழுக் காரணமாகக் கூறப்படுகிறது. கொள்கைகள் அல்ல! இது தனிமனிதவாதம், பதவி மோகம் முதலியவற்றைக் காட்டாது வேறு எதனைக் காட்ட முடியும்? ஆனால் யாவற்றையும் கருத்து என்ற சொல்லினால் மூடி மறைத்து வந்தார் அண்ணாதுரை. ''கருத்திலே புரட்சி'' என்பது அவர் அடிக்கடி கூறிய சொற்றொடர். அது என்ன புரட்சியோ? சிந்தனைக் கருவூலம், அரசியல்மேதை என்றெல்லாம் திராவிடச் செம்மல்களால் வானளாவப் புகழப்படும் இரட்டைப் பொருளாதாரப் பட்டதாரி, அண்ணாதுரை தி. மு. க. தாய்க் கட்சியிலிருந்து பிரிந்ததற்கு கருத்து வேறுபாடு காரணமல்ல என்றார். பெரியாரின் திருமணமே பிரிவுக்குக் காரணம்; கொள்கை வேறுபாடு அல்ல. அவர் சொன்னார்: ''தி. மு. க. தோன்றிவிட்டது! திராவிடக் கழகத்திற்குப் போட்டியாக அல்ல. அடிப்படைக் கொள்கைகளில், கருத்துக்களில்—மாறுதல், மோதுதல் எதுவும் கிடையாது.'' கருத்திலே ஆழமான

7-ம் பக்கம் பார்க்க

# ரூ. 150 பண்டிகை முன்பணம் வென்றெடுத்தது

## இ. தொ. ச. ச.

தமது ஸ்தாபனங்களில் தொழில் பார்க்கும் தொழிலாளர்களுக்கு பண்டிகை முன் பணம் கூட்டப்பட வேண்டுமென பல வருடங்களாக இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் போராடி வந்ததை தனியார் துறை தொழிலாளர்கள் அறிவார்கள்.

1955ம் வருடம் ஆண் தொழிலாளர்களுக்கு ரூ. 100/-, பெண் தொழிலாளர்களுக்கு ரூ. 75/- பண்டிகை முன் பணமாகப் பெற்றுக் கொடுத்தது இலங்கை தொழிற்சங்க சம்மேளனம். அண்மைக் காலங்களில் வாழ்க்கைச் செலவினங்கள் வானுயற வளர்ந்துள்ளதால் பண்டிகை முன் பணத்தைக் கூடுதலாக்க வேண்டுமென கோரிக்கை வைத்த போதெல்லாம் முதலாளிகள் ஏதேனும் சாக்குபோக்குகள் காட்டி கோரிக்கையை ஏற்காமல் நிராகரித்து வந்தார்கள்.

இவ் வருடம் பண்டிகை முன் பணமாக ரூ. 200/- வேண்டுமென இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் முதலாளிமார் சம்மேளனத்திற்கு கோரிக்கை வைத்தது. அந்த கோரிக்கையை 29. 1. 69ல் இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் முதலாளிமார் சம்மேளனத்திற்கு சமர்ப்பித்தது. இக் கோரிக்கையை முதலாளிமார் சம்மேளனம் நிராகரித்தால் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்குவதற்காக இ. தொ. ச. ச. தைச் சேர்ந்த சகல அங்கத்தவர்களையும் தயார் நிலையில் இருக்குமாறு கேட்டுக்கொண்டது. முன்பண உயர்வு வேண்டுமென இ. தொ. ச. ச. சமர்ப்பித்த இக் கோரிக்கைக்கு அடிப்படைக் காரணங்களாக 1955ம் வருடத்திற்குப்பின் வாழ்க்கைச் செலவின் உயர்வையும், பண்டிகை காலங்களில் தொழிலாளர்கள் தமது குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உபயோகப் பொருட்களது, ஐவுளிகளினதும் விலைவாசிகள் மிக கூடியுள்ளதையும் எடுத்துக் காட்டியிருந்தது.

இ. தொ. ச. ச. எடுத்த தொடர்ந்த நடவடிக்கைகள் இவ் வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளது என இ. தொ. ச. ச. பெருமையுடன் கூறிக் கொள்கிறது. தமது அங்கத்தவ ஸ்தாபனங்களில் வேலை செய்யும் சகல ஆண் தொழிலாளர்களுக்கும் ரூ. 150/- வீதமும், பெண் தொழிலாளர்களுக்கு ரூ. 100/- வீதமும் முன்பணம் கொடுப்பதாக, எமக்கு 27-2-69ல் முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் இன்னும் ரூ. 100/- முன் கிடைக்கும் போது, தனியார்துறை தொழிலாளர்களுக்கு இவ் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது இ. தொ. ச. ச. வின் போராட்ட உணர்வே.

தொழிற் சங்க இயக்கத்திலுள்ள திரிபுவாத, சீர்திருத்தவாத தலைமையை நிராகரித்து விட்டு தனியார்துறை தொழிலாளர்கள் புரட்சிகர கொடியின் கீழ் அணிதிரண்டு ஐக்கியத்தையும்- சக்தியையும் வளர்த்துக் கொண்டால் மேலும் பல வெற்றிகளை அடைய முடியும்.

# வேலையில் நிரந்தரமாக்கு

## மில்க் வைற் சோப் தொழிலாளர்களின் போராட்டம்

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைமையில் அணிதிரண்டுள்ள யாழ். மில்க் வைற் சோப் தொழிற்சாலை தொழிலாளர்கள் கடந்த பெப்ரவரி 27 ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளார்கள். நிர்வாகத்தின்ன் ஈவிரக்கமற்ற சுரண்டலையும் — பழிவாங்குவதையும் எதிர்த்தும், ஒப்புக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையை அமுல் செய்யுமாறு கோரியும் இவ் வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

ஏற்கனவே, செய்யப்பட்ட உடன்படிக்கைப்படி ஆறு மாதத்திற்கு மேல் வேலை செய்த தொழிலாளர்களை நிரந்தர மாக்குவது என்பதை மீறி தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்கிறது மில்க் வைற் சோப் நிர்வாகம். வேலையில்லை என்ற சாட்டில் தொழிலாளர்களை விலக்கிவிட்டு புதியவர்களை வேலைக்கு எடுப்பதைத் தொழிலாளர்கள் கேட்ட போது தொழிலாளர்களை நிர்வாகம் பயமுறுத்த முயன்றிருக்கிறது. ஆறு மாதங்களுக்கு மேல் வேலை செய்தவர்கள் தொழில் நிரந்தரமாக்கப்படல் வேண்டும் என்பதுதான் பொதுவான நடைமுறை. ஆனுல் மில்க் வைற் சோப் நிர்வாகம் இதை மீறப்பார்க்கிறது.

ஆறுமாதங்கள், ஒரு வருடம், ஒன்றரை வருடங்களுக்கு மேல் வேலை பார்த்தவர்களைக் கூட இந்த நிர்வாகம் தொழில் நிரந்தரமளிக்காமல் விரட்டுகிறது. இப்படிச் செய்து தொழிலாளர்களின் தொழிற் சங்க உணர்வை சீர்குலைத்து, தொழிற் சங்கத்தை உடைத்துவிட்டு, தனது கொள்ளைச் சுரண்டலுக்கு தொழிலாளர்களை இரையாக்குவதற்கு கனவு காண்கிறது மில்க் வைற் சோப் நிர்வாகம்.

ஆனுல், மில்க் வைற் சோப் தொழிலாளர்கள் நிர்வாகத்தின் பயமுறுத்தலுக்கும் நயவஞ்சகத்திற்கும், பலிவாங்குவதற்கும் பயந்து விடவில்லை. தமது நியாயமான கோரிக்கைகளை தொழிற்சங்க நடவடிக்கை மூலமே பெறுவதற்கு தீர்மானித்து வேலைநிறுத்தம் செய்துள்ளார்கள்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடு! ஆறு மாதங்களுக்கு மேல் வேலை செய்த சகல தொழிலாளர்களையும் நிரந்தரமாக்கு! என்ற கோரிக்கைகளின் கீழ் மில்க் வைற் சோப் தொழிலாளர்களின் போராட்டம் உக்கிரமடைந்து வருகிறது.

# அப்புத்தளை பின்னக்கட்டை தோட்டத்தில் வேலைநிறுத்தம்

இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தின் புரட்சிகர தலைமையில் திரண்டுள்ள பின்னகட்டை தோட்டத் தொழிலாளர்கள் கடந்த பெப்ரவரி 14ந் திகதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்து வருகிறுர்கள். அப்புத்தளை மாவட்டத்திலுள்ள இத் தோட்டத்தில் தோட்ட நிர்வாகமும், பென்சு காசு கங்காணி பரம்பரையைச் சேர்ந்த லோகநாதனும் செய்யும் அட்டூழியங்களை எதிர்த்தும், வயது வந்தவர்களை வேலைக்குப் பதிய வேண்டும் என்றும், துரோகத்தனம் செய்யும் லோகநாதனை வேலை நீக்கம் செய்யவேண்டும் என்ற முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தும் இப் போராட்டம் நடைபெறுகிறது.

பென்சு காசு லோகநாதன் தோட்டத்துரையின் காவல் நாயாக தொழிலாளர்களுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வயிற்றை நிரப்பிக்கொள்வதோடு தனது உறவினர்களுக்கும் தோட்டத்தில் வேலை தேடிக் கொடுத்து சலுகைகள் அனுபவிப்பவன்.

ஏகாதிபத்திய வெள்ளையர்களுக்குச் சொந்தமான இத் தோட்ட நிர்வாகத்துக்கு ஆதரவாக அப்புத்தளை பொலிஸ் உதவுகிறது. ஏகாதிபத்திய சார்பு யூ. என். பி. ஆட்சியில் மக்கள் விரோத பொலிஸ் படை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களை இம்சித்தும், பயமுறுத்தியும் பலவீனமாக்கி வேலை நிறுத்தத்தை சீர்குலைக்க முயலுகிறது. இதனுல் அப்புத்தளை மாவட்டத்திலுள்ள சகல தோட்டப் பகுதிகளிலும் இவ் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு பேராதரவு வளர்ந்து வருகிறது.

''எங்கு அடக்கு முறை உண்டோ அங்கு எதிர்ப்பும் உண்டு'' என்ற தோழர் மாசே—துங் போதனைக்கிணங்க நிர்வாகத்தினதும், பென்சு காசு லோகநாதனின் குண்டர்களினதும், அப்புத்தளை பொலிஸினதும் கொடுமைகளைப் பின்னகட்டை தொழிலாளர்கள் துச்சமெனக்கருதி வீரத்துடன் போராடுகின்றனர்.

இதே தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஜனவரியில் கிராமப் புறங்களிலுள்ள சிங்கள விவசாயிகளையும் அணிதிரட்டி இங்கு வெள்ளையனின் சுரண்டலுக்கு எதிராகப் போராடியது பற்றிய செய்தியை முன் ''தொழிலாளி'' யில் வெளியிட்டிருந்தோம். வீரம் செறிந்த புரட்சிகர உணர்வுள்ள பின்னக் கட்டை தொழிலாளர்கள் வெள்ளை ஏகாதிபத்திய சுரண்டலை எதிர்த்து நடத்தும் இப் போராட்டம் அப்புத்தளை மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களிடையே புதிய எழுச்சியைத் தந்துள்ளது.

புரட்சிகர செங்கொடிச் சங்கத்தின் போராட்ட உத்வேகம் பின்னகட்டை தோட்டத்தில் தோட்ட முதலாளி தொண்டமானின் சங்கத்தையும் மூடுவிழா செய்துவிட்டது. சமீபத்தில் இருநூறுக்கும் அதிகமான தொழிலாளர்கள் செங்கொடிச் சங்கத்தில் இணைந்து வேலை நிறுத்தத்தில் குதித்திருப்பது குறிப்பிடத் தக்கது.

◎ 5-ம் பக்கத் தொடர்

சுட்டுவீழ்த்தினர். இத்துடன் லாவோஸ் மீது சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க போர் விமானங்களின் எண்ணிக்கை ஆயிரமாகும். ஆயிரம் விமானங்களின் பெறுமதி என்ன? அவற்றின் விமானிகளின் கதியென்ன? இவற்றைப்பற்றி ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கவலைஇல்லை. இத்தனை விமானங்கள் நாசமானுல் விமானங்களை உற்பத்திசெய்யும் ஏகபோக முதலாளித்துவக் கார்பொரேஷன்களுக்குக் கொண்டாட்டந்தானே. அவர்களுக்கு நல்ல விற்பனைத்தானே. எனவேதான் மார்க்ஸ் ஆணித்தரமாகச் சொன்னுர்: இராணுவத் தளபாடங்களை லாபநோக்குடன் உற்பத்தி செய்யும் முறை இருக்கும் வரை உலகில் போர்களை நிறுத்தவே இயலாது.

1964-ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதியன்று அமெரிக்க ஏகாதிபத்தியப்படைகள் லாவோஸ் விடுதலைப் படையினர் வென்றெடுத்த பிரதேசங்கள் மீது குண்டு வீச்சை ஆரம்பித்தனர். ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து இறுதியில் ஆளையே கடிப்பது போல

## உலக வலம்

''போர் முறை ஆலோசனை'' என்ற பெயரிலே தொடங்கி, இப்பொழுது அமெரிக்க விமானங்களே தாய்லாந்திலுள்ள தளங்களிலிருந்து புறப்பட்டு லாவோஸ் தேசபக்தர்கள் மீது நேரடியான தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன. விமானப் படையினது தாக்குதல்களின் அளவுக்கு இன்னும் தரைப்படையின் ஆக்கிரமிப்பு இடம் பெறவில்லையாயினும், வியத்நாமிலே சில வருடங்களுக்கு முன் அமெரிக்கா பங்கு கொண்ட அளவுக்கு இப்போது அயல் நாட்டில் காணப்படுகிறது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

மேற் கூறிய ஆயிரத்தாருவது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை யொட்டி விடுக்கப்பட்ட அறிக்கையின் படி இவற்றில் 238 சில்லறைப் போர்க் கருவிகளினுல் வீழ்த்தப்பட்டன என்றும் சுமார் 40 விமானங்கள் தளங்களிலேயே நாசமாக்கப்பட்டன என்றும் தெரிகிறது. இது விடுதலை முன்னணியினருக்கும், லாவோசிய தேசபக்தர்களுக்கும் பெரு வெற்றி என்று அறிக்கை கூறியுள்ளது. இத்தகைய வெற்றிகளின் காரணமாக இவற்றுக்குப் பாராட்டும் உற்சாகமும் அளித்து வரும் சீனத் தோழர்களுக்கு லாவோசிய விடுதலைப் படையினர் சகோதரத்துவ நன்றி தெரிவித்துள்ளனர். தலைவர் மாஓ வின் மக்கள் யுத்தக் கோட்பாடு அதிகமதிகமான லாவோசிய ஏகாதிபத்திய எதிர்ப்பாளரையும் மக்களையும் ஈர்த்து வருகிறது.

நிலைமை இவ்வாறிருக்கவும், வியந்தியனேிலுள்ள சோவியத் தூதுவர் நிலைமையைக் ''கட்டுப்பாட்டுக்குள்'' வைத்திருக்க முயல்வதாகவும், அப்பிராந்தியத்திலே புதிய ''நெருக்கடிகள்'' எதனையும் தோன்ற விடாமற் பார்த்துக் கொள்வதாகவும் லாவோசிய ராஜ்யத் தலைவர்களுக்கும் அங்குள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தினருக்கும் உறுதி கூறியிருப்பதாகத் தெரிகிறது. இதிலொன்றும் புதுமையில்லையே! எங்கெங்கு புரட்சித் தீ மூளுகிறதோ அங்கெல்லாம் தண்ணீரும் மண்ணும் வாரிக் கொட்டும் எதிர்ப் புரட்சிக் கைங்கரியத்தை தானே திரிபுவாதிகள் தப்பாது செய்து வருகிறைனர். ஆனுல் உலக வரலாறு திரிபுவாதிகளினதும் அவருடைய சகாக்களான ஏகாதிபத்திய வாதிகளினதும் மன விருப்பத்தின்படியே நடப்பதில்லை.

◎ 6-ம் பக்கத் தொடர்

பிடிப்பு இல்லாமையாலேயே அன்றுதொட்டு இன்றுவரை எத்தனையோ பிரச்சினைகளில் குத்துக்கரணம் போட அண்ணுதுரையால் முடிந்தது. முன்னர் ''ஆச்சாரியார்'' என்றுல் திராவிடரின் பரம எதிரி என்று கூறிவந்த அண்ணுதுரை பின்னுளில் ராஜாஜியை ''நண்பனுய், மந்திரியாய், நல்லாசிரியனுய்'' கொண்டு அவருக்கு நல்ல பிள்ளையாய் நடந்து வந்திருக்கிறுர். 1949—ம் வருடம் மே மாதம் பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர் திருவண்ணுமலையில் இராஜகோபாலாச்சாரியாருடன் ''சுமார் ஒரு மணி நேரம் தனித்துப் பேசியது'' அண்ணுதுரை கும்பலுக்கு குழப்பத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கியதாம். ஆனுல் அதே ராஜாஜியை ஈடிணையற்ற அரசியல் தலைவராக அண்ணுதுரை கொள்வதற்கு எதுவும் தடையாயிருக்கவில்லை.

பெரியார்—மணியம்மை விவாகம் தி. க. வில் ''ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கி விட்டது'' என்கிறுர் அண்ணுதுரை. உலக அரசியல் கட்சிகளின் வரலாற்றிலேயே இது ஒரு விசித்திரந்தான். தந்தையின் மறுமணத்தால் தனயன் கோபித்துக்கொண்டு போய் புதிய கட்சியொன்றை தாபித்தாராம். இக் குடும்பச் சண்டை இன்றுவரை பிதுரார்ஜிதமாகக் கட்சியில் நின்று நிலைப்பது ஒருபுறமிருக்க, (கருணுநிதி — நெடுஞ்செழியன் மோதல்) தி. மு. க. வின் அரசியல் தன்மைக்கே இது விளக்கம் தருவதாயுள்ளது.

—தொடரும்

# மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன்

# கோயில் ஆலய பிரவேசத்திற்கு தயாராகுங்கள்

## தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் அறைகூவல்

பெரியோர்களே, தாய்மார்களே, சகோதர, சகோதரிகளே, வாலிபர்களே!

**17-3-69** திங்கட் கிழமை மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோயில் வருடாந்த பொங்கல் உற்சவம் ஆரம்பமாகின்றது.

இந்த நன்நாள், சாதி அமைப்பு முறைக்கு மாறாக, சகல மக்களும் கோயிலின் உட்சென்று எவ்விதப் பாகுபாடும் இன்றி ஆலய வழிபாடு செய்யும் நாளாக இருக்க வேண்டும்.

இது காலவரை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த உரிமைகளில் ஒன்றான சமத்துவமான ஆலய வழிபாட்டுரிமையைப் பெறுவதற்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடத்தி வந்த பேரியக்கத்தின் ஒரு அங்கமாக 17-1-69ல் நடந்த மாநாட்டின் முடிவை ஒட்டி அதை நடைமுறைப் படுத்தும் வகையிலும், எமது மக்களின் சமத்துவமான ஆலய வழிபாட்டுரிமையை வென்றெடுத்து அதை நிலைப் படுத்தும் வகையிலும், உற்சவத்தின் ஆரம்ப நாளான பங்குனி முதற் திங்களில் ஆலயப் பிரவேசத்தை மேற்கொள்வதென தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தென்மராட்சிக் கிளை முன்கூட்டியே முடிவுசெய்து அதற்கான ஆக்க வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது.

ஆகவே 17-3-69 முதற் திங்கள் தினத்தை சகல மக்களும் மனதில் இருத்தி செயல்பட வேண்டும். தியாகிகளாகிய எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற பணியை நிறைவேற்றுகின்றோம் என்ற நம்பிக்கையோடும் உரிமைக்காகப் போராடுகின்றோம் என்ற உணர்வோடும் ஆண்களும், பெண்களும், முதியோரும், சிறியோரும் குறிப்பாக வாலிபர்களும் ஆலயப் பிரவேசத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

எமது ஆலயப் பிரவேசத்திற்கான முடிவு இறுதியானது, மாற்ற முடியாதது. ஏனெனில் எமது கோரிக்கை சரியானதும், நியாயமானதுமாகும். இதனைத் தெளிவு படுத்தியும், அதற்கு ஆதரவு கோரியும் நல்லெண்ணம் படைத்த சைவப் பெரியார்கள், பிரமுகர்கள் ஆகியோர் மத்தியில் தொடர்பும், அதன் மூலம் ஆதரவும் பெற்றுள்ளோம். அவர்களது ஆதரவுக்கும், ஒத்துழைப்புக்கும் நாம் கடமைப் பாடுடையவர்கள்.

ஆனால் இப்பிரச்சினையில் காலதாமதத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு அறிக்கைகளின் மூலமும் பேச்சுக்களின் மூலமும் செயல்படுபவர்கள் உண்மையில் தமிழ் மக்கள் மத்தியில் புரையோடி நாற்றமெடுக்கும் சாதி முறையைக் கட்டிக்காத்து அதன் மூலம் சாதியின் பெயரால், பிளவுகளையும், பேதங்களையும் ஏற்படுத்தி இவ் இருபதாம் நூற்றாண்டில் உலகத்தின் முன்னிலையில் தமிழர்களை தொடர்ந்தும் தலைகுனிய வைக்கும் முயற்சியே தவிர வேறொன்றும் இல்லை.

ஆகவே, எமது ஆலயப் பிரவேசத்திற்கான முடிவை உறுதியுடன் செயல்படுத்த சகல மக்களையும் அணிதிரளுமாறும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தென்மராட்சிக் கிளை அறைகூவல் விடுகின்றது.

**தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க தென்மராட்சிக் கிளை சார்பில்**

க. சுப்பையா (மட்டுவில் வடக்கு) வெ. சின்னத்தம்பி (மந்துவில்) த. நல்லையா (மீசாலை) பொ. நாகமணி (மட்டுவில் தெற்கு) சி. கந்தையா (கைதடி) ப. சிதம்பரப்பிள்ளை (மிருசுவில்) வே. சின்னையா (மட்டுவில் வடக்கு) சி. நடராசா (மட்டுவில் வடக்கு)

---

◎ 1-ம் பக்கத் தொடர்

தொழிலாளர்களைப் பார்த்து வேலைக்குத் திரும்பாதீர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்யுங்கள் என சி. டி. யூ. எப். அறைகூவல் விடுத்தது. அமைச்சரின் இந்த நடவடிக்கை சி. டி. யூ. எப். பின் கடுமையான எதிர்ப்பின் மத்தியில் முதலாளிகளின் நலன் கருதி எடுக்கப்பட்டதாகும் என்றார் அவர்.

மேலும் அவர் கூறியதாவது ஆனால், கூட்டணி தொழிற் சங்கங்களின் தலைவர்கள் டாக்டர் என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் ஆகியோர் சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தினால் ஏற்படும் விளைவுகள் பயங்கரமானவை எனக்கூறி தொழிலாளர்களைப் பயமுறுத்தி அடிபணியச் செய்து வேலைக்குத் திரும்பச் செய்தனர். இது தற்கொலை செய்யுங்கள் எனக் கூறுவது போன்ற ஒரு ஆலோசனையாகும். சி. டி. யூ. எப். மேலும் இரண்டு நாட்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தது. ஆனால், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த நான்கு தொழிற்சங்கங்களின் மத்திய ஸ்தாபனங்களுள் மூன்று மத்திய ஸ்தாபனங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டபின் தனித்து போராடுவது கடினம் என்பதை உணர்ந்ததால் சி. டி. யூ. எப். தனது அங்கத்தவர்களையும் வேலைக்குத் திரும்புமாறு கேட்டது.

கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு தொழிற் கோர்ட்டின் மீது நம்பிக்கை வைக்காதீர்கள் என சி. டி. யூ. எப். செய்த எச்சரிக்கை சரியானதென நிரூபிக்கப்பட்டுள்ளது. நாளுக்கு எட்டு சதம் சம்பளவுயர்வு கொடுக்கின்ற தொழிற் கோர்ட்டின் இந்த தீர்ப்பின் மூலமாக தொழில் கோர்ட் தன்னையும், இதர சமரச ஸ்தாபனங்களையும் பெருத்த அவமானத்துக்குள்ளாக்கியுள்ளது. தொழிலாளி வர்க்கத்திற்கும் இது நல்லதோர் பாடத்தைக் கற்பித்துள்ளது. தொழிலாளர் வர்க்கம் தனது சொந்த பலத்தில், ஸ்தாபன ரீதியான தனது சக்தியில் நம்பியிருக்க வேண்டுமென்பதை உணரவைத்துள்ளது. சமசமாஜ தலைவர்கள், கெனமன் திரிபுவாத கும்பல் போன்ற, தொழிலாளர்களின் போராட்டங்களை சதாவும் காட்டிக் கொடுத்துள்ள, தொழிலாளர் வர்க்கத்திற்கு புரட்சிகர தலைமை கொடுக்க மறுக்கின்ற, தொழிற்சங்க தலைவர்கள் யாவரும் தொழிலாளர்களினால் நிராகரிக்கப்பட வேண்டும்.

அவர்கள் சி. டி. யூ. எப். பினதும், மார்க்சிஸ—லெனினிஸ இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினதும் புரட்சிகர கொடியின் கீழ் அணிதிரள வேண்டும். மேற்குறிப்பிட்ட தொழில் கோர்ட் தீர்ப்பைத் தொடர்ந்து கோபாவேசம் கொண்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களை செய்வர், போராட்டங்களை செய்ய முன் வருவர் என்பதில் சந்தேகமில்லை. அநியாயமான இத் தீர்ப்புக்கு எமது எதிர்ப்பை நாம் பிரகடனம் செய்ய வேண்டும். புதிய போராட்டங்களுக்கு நாம் தயாராக வேண்டும், புரட்சிகரப் பாதையில் செல்வதற்கு தொழிலாளர் வர்க்கத்தை ஐக்கியப் படுத்துவோமாக,

---

# 'பாராளுமன்றம் கள்வர் குகை'

—தோழர் எஸ். டி.

## எனவே அவர் தடை செய்யப்பட்டார்

கம்பஹா தொகுதி கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர் தோழர். எஸ். டி. பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தை கள்வர் குகையெனக் கூறியதற்காக இரண்டாம் தடவையாக தடைசெய்யப்பட்டுள்ளார்.



தோழர். பண்டாரநாயக்கா வர்ணித்தது போன்று கோட்டடியின் புதிய அங்கத்தவரான திரு. ஜோர்ஜ் கொத்தலாவலை இம்மாதம் 5ம் தேதி பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டபோதே இச் சம்பவம் நடைபெற்றது. பொதுத் தேர்தலின்போது குறைவாக வாக்குகளைப் பெற்றபோதிலும் உயர் நீதி மன்றத்தினால் அவர் பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதிலும் பார்க்கத் திறமாக பாராளுமன்ற ஜனநாயகப் பம்மாத்தை அம்பலப்படுத்த முடியாது. பாராளுமன்றம் கள்வர் குகையென தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா கூறியபோது பல எதிர்க்கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்களும் அதனை ஏற்றுக் கொண்டனர்.

இவ் வார்த்தைகளை வாபஸ் பெறுமாறு சபாநாயகர் கேட்டுக் கொண்டார். தோழர். எஸ். டி. தான் கூறியதை வாபஸ் பெற மறுத்துவிட்டார். எனவே, அவர் பெயர் சொல்லப்பட்டது. கம்பஹா தொகுதி அங்கத்தவர் ஒரு வருட காலத்திற்கு தடைசெய்யப்பட வேண்டுமென ஒரு தீர்மானத்தை ஜே. ஆர். கொண்டுவந்தார். ஒருவருட காலத்திற்கு தடைசெய்வதற்கு எதுவித விதியுமில்லையென சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, ஒருவாரம் என தனது தீர்மானத்தை திருத்தி பிரேரித்தார். தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், சென்ற முறையைப் போலில்லாது தடை செய்வதற்கு தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது அங்கு பிரசன்னமாயிருந்த சகல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தோழர் எஸ். டி. க்கு ஆதரவாக இருந்தனர்.

---

**பன்றித் தலைச்சி அம்மன் கோயில்**
**ஆலயப் பிரவேச இயக்கத்தை**

**ஆதரித்து**

# மாபெரும் கூட்டம்

**மட்டுவில் வடக்கு அரசினர் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள மைதானத்தில்**

**11-3-69**

**செவ்வாய் பி. ப. 5 மணிக்கு நடைபெறும்**

**அனைவரும் திரண்டு வருக!**

---

**தீண்டாமையை, சாதி அடக்குமுறையை**
**ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கத்திற்கு ஆதரவாக**

# பொதுக் கூட்டம்

**இடம்:- செஞ்சிலுவை சங்க மண்டபம்**
தர்மபால மாவத்தை, கொழும்பு.

காலம்:- மார்ச் 16ம் திகதி, மாலை 5 மணி.

பேச்சாளர்கள்:- எஸ். டி. பண்டாரநாயக்கா, எம். பி. வண. தேவல தர்மராம, சி. டீ. எஸ். சிறிவர்தன. (முன்னாள் செனட்டர்); ஐ. கரண்ணகொட, (முன்னாள் செனட்டர்) எம். வைரமுத்து, திஸ்ஸ விஜயரத்ன, எச். எல். கே. கரவிட்ட, அலக்ஸெண்டர் மத்யூ, கே. எல். வி. அழகிய வண்ண, வீ. ஏ. கந்தசாமி, கே. டானியல், எம். ஹலிம் இஷாக், என். சண்முகதாசன்.

**வடக்கிலே நிலவும் சாதி ஒடுக்குமுறையைச் சித்தரிக்கும்**

## ஓவியக் கண்காட்சி

மார்ச் 17, 18ம் திகதிகளில் லயனல்வெண்ட் கலாபவனத்தில் நடைபெறும்.

இதனை மார்ச் 17ம் திகதி மாலை 4மணிக்கு

**செனட்டர் ரெஜி பெரேரா, திறந்து வைப்பார்.**

பிரவேசம் இலவசம்!

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'' அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2